விலை 0-1-3 அணா UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி. 1] சென்னை, சனிக்கிழமை (2-4-1949) [குண்டு 24

வெளியேறுங்கள்!

(தனமனோகரன்)

"முதலாளித்துவம் ஒழிக! சுரண்டல் ஒழிக! கருங்காலிகள் ஒழிக! இவை கம்யூனிஸ்டு தோழர்கள் வேலை நிறுத்த காலங்களில் தொண்டைகிழிய கத்திய வாசகங்கள்.

"வெள்ளையனே வெளியேறு! காந்திஜீக்கு ஜே! ஜெய் ஹிந்த்" இவை காங்கிரஸ் தோழர்கள் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு சத்தியாக்கிரக காலங்களில் ஒலி பரப்பிய சொற்கள்.

"வெள்ளையன் வியாபார நோக்கோடு இங்கு வந்து நம்மை அடிமைப்படுத்தினான்—அவன் அன்னியன்—ஆகவே அவன் ஆட்சியை முறியடிக்க—அவனது சுரண்டல் ஆதிக்கத்தை ஒழிக்கவே வெளியேறச் சொன்னோம்" என்று கூறுகிறது காங்கிரஸ். ஆம்! உண்மை!! ஒப்புக் கொள்ளுகிறோம் முழு மனதுடன்!!! அதே போல, இன்று திராவிட நாட்டை சுரண்டிக் கொண்டு திராவிடரை வாழ விடாமல் அடிமைப் படுத்தி ஆளவிரும்புகிற, வடநாட்டு ஆதிக்கமும் பனியாத்தனமும் ஒழிக! பனியாக்களே வெளியேறுங்கள்! என்று திராவிடர் கழகத்தினராகிய நாங்கள் சொல்லுகிறோம். இது தவறாகுமா?

இதை குற்றமென்று மாற்றுக் கட்சித் தோழர்களும், காங்கிரஸ் பத்திரிகைகளும் கூறுமானால் அவர்கள் மனிதத் தன்மையற்ற— அறிவை அடகு வைத்துவிட்ட உன் மத்தர்கள் என்று தான் கொள்ள வேண்டும். அறிவைப் பறி கொடுத்துவிட்ட, சிந்திக்கும் திறனிருந்தும் சிந்திக்க மறுக்கிற, சுரண்டலுக்கு தானாகவே படுத்துப் போகிற, தன்மானமற்றவர்கள்தான் இதன் உண்மையை உணர மறுப்பார்கள்.

நாட்டுக்கு நலம்செய்ய வெள்ளையன் மட்டும் வெளியேறுவது போதாது- வட நாட்டு சுரண்டல் ஆதிக்கமும் தொலைய வேண்டும். வடநாட்டுக் கொள்ளைக்கூட்டமே, வெளியேறுங்கள்—இவ்வாறு திராவிடத் தலைவர் பெரியாரும் திராவிட கழகத்தினரும் சொல்லி வருகிறார்கள். திராவிடத்தை சுரண்டிவரும் கும்பல்களில் முக்கியமான வட நாட்டு பனியாக்களை வெளியேற்ற வேண்டியது அவசியம் எனக்கருதிய காரணத்தால் இதனை மற்றவர்கள் விஷமப்பிரச்சாரம் என்றனர். அதன் காரணமாக சுடு சொற்களை வீசுகின்றனர். உண்மை உரைக்கும் நம்மீது! அவர்கள் உண்மையை உணர விரும்பவில்லை—உணர திறமை பெறவில்லை என்பதோடு, நாட்டிலே நடைபெறும் இந்த சதிச் செயலைக் காணமறுக்கிற-காணக் கண் இருந்தும் விழிகள் குருடாய்ப்போய்விட்ட-கேட்கக் காதிருந்தும் கேளாக் காதினராக மாறிவிட்ட சிறுமதியாளர்கள் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

திராவிட நாட்டின் பெரும்பகுதி வறுமைப் பிணியால் பீடிக்கப்பட்டிருக்கிறது. வறுமையின் காரணமாக மக்கள் வேதனைக் குரலை எழுப்புகின்றனர். இவ்வாறு நாடு நலிய—மக்கள்



(அண்மையில் இயற்கை எய்திய சென்னை மேல் சபை அங்கத்தினர், முத்துரங்க (முதலியார்) அவர்களின் காலியான இடத்திற்கு, பல தகுதியுள்ள திராவிட அபேக்ஷகர்களையும் எதிர்த்து டாக்டர் சீனிவாசன் (அய்யர்) அவர்களை ஆதரித்து தீவிர எலக்ஷன் பிரச்சாரத்தில் ஈடுபட்டு ஊர் ஊராய் சுற்றி வருகிறார் உயர்திரு காமராஜர் அவர்கள்.)

வறுமையிலுழல, சாதி, மதம், மூட பக்தி, அறியாமை முதலியவைகள் மட்டுமல்ல—'மிக்சர்' வண்டித் தள்ளி தெருத் தெருவாய் சுற்றி 'குலோப் ஜான்' பால் 'கோவாக்கள்' விற்றுப் பிழைக்கவந்த லம்பாடிக் கூட்டம்; ஏராளமாகக் கடன் கொடுத்து, கொடுத்தகடனுக்கு மேல் வட்டி பெற்றுக் கொண்டு ஏமாறும் உழைப்பாளி மக்களை வீடுபுகுந்து அடித்து உதைத்து, அவர்கள் உழைத்து உழைத்து உருக்குலைய நெற்றி வியர்வை நிலத்தில்கொட்ட சம்பாதித்த பணத்தையெல்லாம் பிடுங்கிக்கொள்ளும் மார்வாடிக்கும்பல்; இந்த நாட்டிலே,லாலாக்கடைவைத்துப்பிழைக்க் வந்து, நெய்யென்றுகூறி, டால்டாவானஸ்பதியிலும், கமறல் கடலை எண்ணையிலும் பலகாரங்கள், மிட்டாய்கள் செய்து மக்களின் வயிற்றைக் கெடுக்கிற வேலையிலேயே, பணம், பணம் என்றுகேட்டு பெட்டி பெட்டியாக கல்லாக்களை நிரப்பி வாழும் புளிச்சேப்பக்கார பனியாகோஷ்டி; விதவிதமான துணிகளை அடுக்கி வைத்து கொள்ளை லாபமடிக்கும் பனாரஸ் சில்க் எம்போரியங்கள்; டால் அடிக்கும் வைரங்களை பகட்டான விளம்பரங்களின் மூலம் விற்பனை செய்து நாட்டுப் பணத்தை சுருட்டிச் செல்லும் சுராஜ்மல்லுகள்; பொதுவாக, இந்த நாட்டிலே டப்பா வண்டி தள்ளி வயிறு பிழைக்க வந்து திராவிட நாட்டை உருப்பட விடாது குட்டிச் சுவராக்கி சுரண்டி உண்டு உல்லாச வாழ்வு நடத்துகிற உலுத்தர் கூட்டம்—இந்த நாட்டை அடிமைப்படுத்தியதே காரணமாகும். எனவேதான், திராவிட சமுதாயம் வறுமையிலிருந்து விடுதலை யடைந்து சுகவாழ்வு பெற வேண்டுமானால், முதலில் இவைகள்—களையான்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று பல்லாண்டுகளாக சூறாவளிபோல் சுற்றிச் சுற்றி பிரச்சாரம் செய்து வருகிறார். திராவிடத் தந்தை பெரியார் அவர்கள். வெளியேறுங்கள்! இதுதான் திராவிடர் கழகத்தின்—சுயமரியாதை இயக்கத்தின் இலட்சியகீதம்! இதுதான் திராவிட நாட்டின் விடுதலைக்கு அடிகோலும் மூலமந்திரம்! இது தான் ஆயிரமாயிரம் மக்களின் இதய குமுறல்.

வட நாட்டு இரும்புப் பிடிப்பில் சிக்குண்ட திராவிட சமுதாயத்தை—வறுமைக்கடலில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருக்கும் பெருங் குடிமக்களை, மேலும் மேலும் பனியாக் கூட்டம் போன்ற களையான்கள் அரித்துக் கொண்டிருப்பதென்றால் அது சகிக்க முடியாதது மட்டுமல்ல, மன்னிக்கமுடியாத பெருங்குற்றமுங்கூட! இத்தகைய சுரண்டிவாழும் திட்டத்தோடு செயலாற்றும் அன்பர்களை ஆதரித்துக் கொண்டிருக்கும் ஆட்சி, யாருடைய ஆட்சியாயிருப்பினும், பாரதமாதாவின் ஆசீர்வாத பலத்தால் நடைபெறும் ஆட்சியாயிருப்பினும்சரி, உண்மையாக திராவிட மக்களின் முன்னேற்றத்தில்—நலனில் அக்கரை கொண்டுள்ள தன்னலமற்றதகைமையாளர்கள் அதற்குத் தலைவணங்கி அத்தகைய ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்டால் அதை அந்த நல்லோர்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஏன் இவ்வாறு உள்ளமொடிந்து கூறுகிறேனென்றால், இந்த திராவிட நாட்டிலுள்ள மக்கள் துயருறுவது போல வேறு எங்கும்காணவோ; கேட்கவோ முடியாது. நாட்டின்மீது உங்கள் கண்ணோட்டத்தை செலுத்துங்கள் இந்த நாட்டில் வளமுடன் வாழ்ந்த பெருங்குடிமக்கள் இன்று உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வானமே கூரையாகவும், தரையையே மெத்தையாகவும், கையையே தலையணையாகவும் வைத்து உறங்கி பஞ்சைப் பராரிகளாய் உலவுவதைப் பாருங்கள். சான்று வேண்டுமானால் சென்னைமாநகரத்தை ஒரு சுற்றுசுற்றி வாருங்கள். தெருக்களில் காலியான திண்ணைகளையே காண்பதரிது—ரயிலடி நிலையங்களிலும் பஸ் ஸ்டாண்டுகளிலும் உட்கார இடமே காண முடியாது.

சற்று இப்படி வாருங்கள், அதோ பார்த்தீர்களா? கிரேக்க ரோமானிய நாட்டிற்கு அகிலும் தேக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்து அரும்பொருள் ஈட்டி உலகோர் புகழ வாழ்ந்திருந்த மக்கள் தாயகத்திலே வேலையின்றி, சாண்வயிற்றைக் கழுவ மலேயா, சிங்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

கடல் கடந்து தவிக்கும் திராவிடர்

“ தா. பேட்டை, எம். எஸ். என். இராசன் ”

அடித்து தாக்கப் படுகின்றனர் திராவிடர்கள், ஓடும் ரயிலிலிருந்து கீழே தள்ளப்படுகின்றனர். நமது தமிழக நண்பர்கள், வீடுகள் சூரையாடப்படுகிறது. தெருவில் நடக்கப்பீதி கொள்கின்றனர் தென் ஆப்பிரிக்காவில் திராவிடத்தின் சொந்தக் காரர்க்களுக்கு மலானின் ஆட்சியில் கொடுமை, அநீதி அக்கிரமம். திராவிடனின் விழிகளில், கண்ணீர் கலங்கும் காட்சிஆப்பிரிக்காவில், மலேயாவில் கம்யூனிஸ்ட் தாக்குதலில், தவிக்கும் தமிழர்கள், தரணியாண்ட தமிழன், பர்மாவில், சொத்துக்களை இழந்து சோற்றுக்குத் தவிக்கும் நேரத்தில் உள்நாட்டுப்போர், சர்க்காரின் கெடுபிடி ஓர் புறம், கரேன்களின் தாக்குதல் மற்றோர்புறம் ,இடையில் சிக்கிச் சீரழிவது, திராவிடரின் நிலை, அங்கு இலங்கைத்தீவிலே வெளியே போ தமிழா என்று விரட்டும் நிலை, திராவிடர்கள் சென்ற விடமெல்லாம் தொல்லைகள். துயரங்கள், ஆனால் திராவிடம் மற்ற நாட்டவரால் சுரண்டப்படுகிறது. ஏன் இந்நிலை? சிந்திக்க மறந்த தேசியத் தோழனே. உன் இனத்தான், வெளிநாடுகளில் துன்பப்படுவதைக் கண்டு கவனியாது பேசும் காமராஜர் கூட்டுத்தோழர்களே! இந்நாடு திராவிடம், அயல் நாட்டில் அவதியுறும் தோழர்கட்கு, வாழ இடம் தராதா? இந்த நாடு வரண்ட பாலைவனமா? வள மில்லாத நாடா? தஞ்சையும், நெல்வேலியும் கோலாரும் உள்ள நாடு பஞ்சைகளின் நாடா? வற்றாத ஜீவ நதிகள். பல பாயும் நாடு, நெல்லும் மணியும், முத்தும், பொன்னும் ஏராளமாக உள்ள பொன்னாடு நமது தென்னாடு. இவ்வளவு இருந்தும், சிங்களத்தீவிலே செந்தமிழர்கள் சிக்கி சீரழிவானேன், வெளி நாடு செல்லுகின்ற திராவிடத் தோழன் வாழ்த்தியாஇருப்பான். கப்பலின் மேல்தளத்தில் நின்றுக்கொண்டு நஞ்சையும், புஞ்சையும், உள்ள என் தாய் நாடே நான் பஞ்சையானேன், ஜீவநதிபலபாயும் என் திருநாடே என் உடலில் ஜீவன் போகும் நிலை ஏன்? தில்லையானும், திருவரங்கத்தானும் வேங்கட வரதனும், வாழும் நாட்டில், எங்களுக்கு வாழ வழியின்றி வெளிநாடு செலலுகின்றோம் உடலில் ஊசலாடும் உயிரைக் காப்பாற்ற, எங்களை கலங்கவிட்டு, அக்கிரமக்காரருக்கு இடம் கொடுத்த நன்றி கெட்ட தமிழ் நாடே நீ அழிந்துபடு. தமிழனை தவிக்கவிட்டு தான் தோன்றிகட்கு இடமளித்த, திராவிடமே, நீ அழிந்து படு, என்று கதறி, கண்ணீரை கடல் நீரில் கலக்கியல்லவா இருப்பார், 5. கோடி திராவிடர்கள் வாழும் திராவிடத்தில் அயல் நாட்டில் வாழும், உடன் பிறந்தானுக்குவாழஇடமில்லையா? வாழமுடியாதா? ஆளவந்தாரே, ஆட்சி பீடம் ஏறியுள்ள, அமைச்சர்களே, ஓமாந்தூர், இராமசாமி அவர்களே, வெளிநாட்டில் உள்ள திராவிடர்களை திரும்பி அழையுங்கள். வாழ வழியமையுங்கள், திட்டம் தீட்டி திறம்பட வேலை செய்யுங்கள், தமிழன் சிந்தும் கண்ணீரை துடையுங்கள், இல்லாவிடில் காலவேகத்தில் கண்ணீர் வெந்நீராகமாறி, வேதனைச் சுழலில் சிக்கிவிடும் திராவிடம். ஏழைகளின் கண்ணீர் புரட்சிவித்துக்கு உரநீராகி மாறி விடும். இந்நாட்டில் பண மில்லையா? வேங்கடத்தான் தலையில் மட்டும் 10-லட்சம், ரூபாய் மதிப்புள்ள, சுரஜ்மல்ஸ் வேலைப்பாடு அமைந்த வைரமுடி ஒளிவீசுகிறதே பஞ்சைகளுக்கு,ஜீவ ஒளிகூட இல்லையே. பெரியதொரு ஆலை அமைத்தால் பல ஆயிரம்தொழிலாளிகள்வாழமுடியுமே, ஆண்டவன்கோபித்துக்கொள்வாரா? அவரது மக்கள் துடிக்கும்போது, 10-லட்சத்தை என் தலையில் வைத்து, பாழ் படுத்தும் பாபிகளே என்று தான் கூறுவார். இன்னும், தங்க ஓடு வேய்ந்த தில்லையான், தங்க விமான திருவரங்கத்தான், வைர மூக்குத்தி-மதுரை மீனாட்சி, திருவாரூர், தியாராஜன், போன்ற இன்னாட்டு(திராவிட) டாட்டாக்கள் பிர்லாக்கள், இருக்கும் போது பணத்திற்கு ஏது பஞ்சம்? மற்றும் ஆடம்பர வாழ்வில் புரளும், தங்க குறடா வெள்ளி கமண்டல பட்டுபீதாம்பரதாரிகளான மடாதிபதிகளிடம்,ஏராளமான செல்வம் சிக்கி சீரழிகின்றது. தங்கள் கணக்குபடி பனிரெண்டாயிரத்தி ஐநூறு கோவில்களின், மூலதனத்தை எடுத்தால், திருவரங்கத்தான் கோபித்துக் கொண்டு வைகுண்டம் சென்று விடுவாரா? செல்ல முடியுமா? அன்று படுத்தவர் இன்றும் எழுந்திருக்கவில்லையே. எழுந்தாலும் வெளியில் வர வாசற்படி, அகலம், உயரம், போதாதே. அப்படிபோனால் தான் போகட்டுமே குடியா மூழ்கி விடும்? இந்நாட்டு, உழைப்பின் உருவங்கள், பஞ்சைகள், ஏழைகளின் துயர் அறியாத சிலைகள் எல்லாம் கடவுள்களா? ஒப்புக்கொள்ள முடியுமா? மனம் இடந்தருகிறதா? மதிப்பிற்குரிய, ஓமாந்தூர், இராமசாமி, அவர்களே, தமிழன் தாயகத்தை விட்டு வெளிநாடுகளில், கண்ணீர் விட்டு கலங்கும் நேரத்தில், கட்டாய இந்தியை புகுத்திய, கல்வி அமைச்சர், அவனாசிலிங்கமே திராவிடன் உயிர் விளையாட்டாக, வேடிக்கையாக ஓடும் ரயிலில் இருந்து தூக்கி எறியப்படும்போது, வடநாட்டு அகதிகளுக்கு இங்கு உபசரணையா? தாய் தஞ்சையில் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாள் தனயன் கும்பகோணத்தில் கோதானம் அளிக்கிறான். என்ற பழமொழிப்படி, உயிர் வாதனை அடையும் உடன் பிறந்தானை மறந்து அகதிமுகாம் அமைக்கும், மந்திரி பக்தவத்சலனாரே, இனியும் தமிழன் தாழான், எவனையும் தாழ்த்தான், திராவிடம் தனியரசு பெற்றாலன்றி, நம் நிலமை. இன்றுள்ள அவல நிலைதான் திராவிடரின் நல் வாழ்வுக்கு வழி காணுங்கள் அமைச்சர்களே. அயல் நாட்டில்அவதியுறுந்தமிழர்களை திரும்பி வர வழையுங்கள், தரணியாண்ட தமிழன் தாழ்வடையும்நிலை ! அந்தோ பரிதாபம்! தமிழனின் செங்குருதி வெளிநாடுகளில் தண்ணீராக கருதுகின்றனர். தமிழனின் உடலில் ஓடுவது ரத்தமல்லவா? வறண்ட பாலை வனத்தை பொன் குலுங்கும் நாடாக்கிய தமிழா, நீ உழைக்கப் பிறந்தவன். பிறர் உண்ணப் பிறந்தவர்களா? என்றுமே திராவிடம் தனியாட்சியுடன் மிளிர்ந்தது ஆனால் வெள்ளையன் வாழ்வுக்காக இந்நாடு வட நாட்டுடன் பிணைக்கப்பட்டு, ஆட்சி புரிந்தனர். வெள்ளையன் வெளியேறியும் தொல்லை நீங்க வில்லையே; இன்று படே லிசப்பிடியில் சிக்கி சீரழியும் திராவிடா. உன் நிலையை உனது தாயகத்தை எண்ணிப்பார்! ஏமாற்றுக்காரரிடம் நாட்டை ஒப்படைத்து ஏமாறும் தோழர்களே, நாம் தனித்து வாழ முடியாதா? சாலைகள், சோலைகள், நெல்லும், மணியும், பொன்னும், ஏராளம், 1500-மைல் நீளமுள்ள அழகிய கடற்கரையைத் தன்னகத்தே கொண்டநாடு. திராவிடநாடு புரட்சிக்கவிபாரதிதாசன்,கூறுவதுபோல்

வெள்ளப் புனலும் ஊளித்தீயும்
வேகச் சீறும் மறவர்கள் நாடு
அகிலும்தேக்கும்அழிபாக்குன்றும்
அழகாய் முத்து குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கும்
நஞ்சை
முல்லைக்காடு மணக்கும் நாடு.

இவ்வளவு வசதியும் உள்ளநாடு நமது திராவிடம், ஏன் வடவரிடம் பல்லை யிளித்து கெஞ்சிப் பிழைக்க வேண்டும்? தேசியமுகாமில் திரண்டிருக்கும் திராவிடத் தோழர்களே வாருங்கள் பெரியாரின்பாசறைக்கு வெற்றி நமதே, திராவிடம் தனி நாடுதான். சரித்திரத்தைப்புரட்டிப் பாருங்கள், அசோகனால், அக்பரால், ஆள முடியாத திராவிடம் ஆரிய, பணியாக்கூட்டுறவில் ஆளப்படுகிறது! வீரத்திற்கு திராவிடன் பின் வாங்கியதில்லை, சாகப் பயப்படாத சமுதாயத்தில் பிறந்த நாம், கோழைகளிடம் அடிபணிவதா? விழித்து வீறு கொண்டு எழுங்கள் என் அருமை காங்கிரஸ் திராவிடத் தோழர்களே காஷ்மீர் பிரச்சனை உடனே கவனிக்கப்படுகிறது. ஆனால் ஆப்பிரிக்கா பிரச்சனை உடனே கவனிக்கப்படவில்லை ஏன்? அதுதான், வட நாடு—தென்னாடு, நாம் காணும் திராவிடம் இந்நிலை! நாம் காணப்போகும் திராவிடம் உரிமை நாடாக. திராவிடத் தனி நாட்டில் வறியரும் இல்லை. செல்வரும் இல்லை. மேனியில் அழுக்குச் சேறுதசோம்பேறி காணமுடியாது. உழைப்பவனுக்கு உரிமை தரப்படும். வெளி நாடுகளில் இந்நாட்டு தமிழர்கள் சிக்கிச் சீரழிந்து இரத்தம் சிந்த தேவையில்லை, கூலிகளாக அயல் நாட்டில் அவதியுறத் தேவை இல்லை. பட்டேலிசம் இந்நாட்டை ஆளமுடியாது, ஓமந்தூர் இராமசாமி, விருதை வீரர், காமராஜர்கள்தான் ஆளமுடியும் அதுதான் திராவிடனின் இலட்சியபூமி. “திராவிடநாடு திராவிடருக்கே.” என்ற முழக்கம் ஒவ்வொரு திராவிடனின் இருதய கீதமாகவேண்டும். தேசியத் தோழர்கள் உடனே ஈரோட்டுபாசறைக்குவந்து, காஞ்சி தளபதியின் கீழ் அணிவகுத்து நில்லுங்கள் உரிமைப் போர் தொடங்க, முதலாளித்வத்தை முறியடிக்க, ஆரியத்தடை கற்களை தகர்த்தெரிய, கூட்டு முன்னணி அமைப்போம், வெற்றி அல்லது வீர மரணம் இரண்டிலொன்று வாழ்ந்தால், சுதந்திர திராவிடத்தில்,வீழ்ந்தால் இடுகாட்டில், வருங்கால அறிஞர்களே, இந்நாட்டு நாட்டுச்சரித்திரத்தை இறந்த திராவிடனின் எலும்புத் துண்டினால் வரைந்து காட்டுங்கள் தெரிந்து கொள்ளட்டும், திராவிட வாலிபர்கள், நாம் காணும் திராவிடம் மலராவன செய்யுங்கள்.

பொங்கு தமிழர்க்
கின்னல் விளைந்தால்
சங்காரம் நிசமென்று
சங்கே முழங்கு.

அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் தங்க
பதக்கங்களும் பரிசு பெற்ற

மூல பவுத்திரி நிபுணர்

டாக்டர். என். ருக்மாங்கதம்

அவர்களால் ஆப்ரேஷன் இல்லாமல் பூரண
சவுக்கியம் செய்ய உத்திரவாதம்

முழு விபரங்களுக்கு தபால் எழுதவும்.

5, இமாம்கான் வீதி, பொள்ளாச்சி.

பண்டைத் தமிழகமும் பார்ப்பனரும்

(ந. வேங்கடத்தரசன், புதுவை.)

தமிழ் நாட்டின் பெருமை!

"சூழ்தரு பரிதியின் ஒளிபடு குன்றம்
தோற்றம் பாடுநர் கூற்றைச் சாருநர்
வீழ்புனல் அருவி ஆடிடும் மகளிர்
வேண்டிய நலமும் ஈண்டிய நாடு
வாழ்க! வாழ்கவே!"

என்று ஆடிப்பாடி அகமகிழ்ந்தோம் ஒரு காலத்தில்! ஆம், நீர்வளம் நிலவளம் மிகுந்து, செல்வமுடையதாய்ச் சீர் பெற்றிலங்கி, அறத்திலும், மறத்திலும், ஒழுக்கத்திலும், வாணிகத்திலும், ஏனைய எல்லாத் துறைகளிலும் உயர்வுற்று ஒருநாடு இருப்பதென்றால் — அந்நாட்டு மக்களில் யார் தான் தன் தாய்நாட்டின் இத்தகைய மேம்பாட்டினைக் கண்டு மகிழ்ச்சியுறாமலிருக்கமுடியும்?

மேலும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!" எவ்வளவு புனிதமான நோக்கம் பாருங்கள்! நஞ்சை புஞ்சை நிலங்கள் நாற்புறமும் சூழப்பட்டு, செந்நெல்லும் செங்கரும்பும் ஏனைய பிறபொருட்களையும் பெரு வாரியாக-பிறருக்கு-நல்கி வாழ்ந்த ஒருநாடு—முத்தும் பவளமும் முடங்கலின்றி கொடுத்துதவிய ஒருநாடு=சீரும் சிறப்பும் பெற்று சீரோங்கி வாழ்ந்த ஒரு நாடு, இவ்வாறு செப்பியது என்றால், இன்றதனை ஒப்புக்கொள்பவர்கள் எத்தனை பேர்?

"யான் பல்லாற்றானும் உயர்வு பெற்று வாழுகின்றேன். அது எனக்கு பெருமகிழ்ச்சியைத்தான் அளிக்கிறது. இருப்பினும், யான் பெற்ற இவ்வின்பத்தைப் போல் இவ்வுலகம் அனைத்தும் அடைய வேண்டு"மென்று தமிழ்நாட்டைத் தவிர, இன்று குபேர சம்பத்தில் வாழும் அமெரிக்காவோ—பொதுவுடைமை நாடெனப் பல்லோரால் போற்றப்படும் ஒரு ரஷ்ய நாடோ கூறினதுண்டா? அவ்வாறு கூறத்தான் முயற்சித்ததா? இவை யாவற்றையும் ஒற்று நோக்கும்போது 'பொதுவுடைமை'யில் சிறந்து விளங்கியது நந்தமிழ் நாடு ஒன்றுதானென்பது தெற்றென விளங்கவில்லையா?

தமிழ்நாடு, வளத்தில் மட்டுமல்ல. வீரத்திலும் சிறந்து விளங்கிற்று. ஆண்களைப்போலவே பெண்களும் வீரத்திற்கோர் அணிகலனாக திகழ்ந்தனர். ஏன், வீரத்தில் ஆண்களை விட அதிக மேம்பாடுடையவர்கள் பெண்கள் என்றே கூறலாம்!

"என்னப்பா புதிர் போடுகிறாய்? பெண்களாவது வீரத்தில் சிறந்திருப்பதாவது? அடுப்பே ஆண்டவனென்று அதனருகிலேயே வாழ்வைக் கடத்தும் பெண்கள்—ஆண்களைக் கண்டால் அஞ்சி நடுங்கி தலைகவிழ்த்துத் தலைமறைவாய்ச் செல்லும் பெண்கள் எப்படியப்பா வீரத்தில் சிறந்திருக்க முடியும்? மேலும் அமெரிக்காவிலே, பிரிட்டனிலே பெண்கள் ஆகாயக் கப்பலில் அனுபாசமாக சவாரி செய்யும்போது, இங்கே அரச மரத்தைச் சுற்றியும், மலையுச்சியில் வீற்றிருக்கும் எம்பெருமானைக் காண ஆங்கமைத்திருக்கும் படிக்கட்டுகளில் ஏற அஞ்சி கீழிருந்தபடியே "அப்பனே, ஆதிமூலமே" என்று சேவித்து வீடு திரும்பும் கோழைப் பெண்களா வீரத்தில் சிறந்திருக்க முடியும் என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பழமை பித்து பிடித்துத் திரியும் பேயர்களாயிருந்தால் "என்ன செய்வது, எல்லாம் அவாளவாள் விதிப்படி தானே நடக்கும்" என்று கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பார்கள். ஆனால், நான் அப்படிக் கூற விரும்பவில்லை,

பண்டைய பெண்கள் வீரத்தில் மட்டுமல்ல தாய்நாட்டுப் பற்றிலும் எவ்வளவு தலை சிறந்தவர்கள் என்பதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு புறநானூற்றிலே 28-ம் பாடலிலே,

"நரம் பெழுந்துலறிய நிரம்பா
மென்றோள் முளரி மருங்கின் முதி
யோன் சிறுவன் படையழிந்து
மாறினன் என்று பலர் கூற, மண்
டமர்க் குடைந்தனளாயின் உண்ட
என் முலையறுத் திடுவேன் யான்
எனச் சினை இக், கொண்ட
வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து
வேறுகிய படுமகன் கிடக்கை
காணவே, ஈன்ற ஞான்றினும்
பெரிதுவந் தனளே!

தன்மகன் போரிலே புறமுதுகு காட்டி வீழ்ந்தனன் என்று பலர் கூறக் கேள்விப் பட்ட நரை மூதாட்டி யொருவள் "அப்படி என்மகன் முறைமாறி வீழ்ந்திருப்பானேயாகில், அவனுக்குப் பாலூட்டிய என் உறுப்பை அறுத்துக்கொள்வேன்" என்று சபதமேற்று, விரைந்து சென்றாள் போர்க்களத்திற்கு. குவிந்து கிடக்கும் பிணங்களை தான் ஏந்திச் சென்ற வாள் முனையினால் புரட்டி தன் மகனை ஆவேசத்தோடு கண்டாள்; அவள் எதிர் பார்த்து வந்ததற்கு மாறாக தன் மகன் மார்பில் அடிபட்டு மாண்புடன் மண்ணில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டாள். "காணற்கரிய காட்சியிதுவே-என்ற பொழுதினும் இதுவே எனக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கிறது!" எனக்களிப்பு மிகக் கொண்டாள்.

நான் பெற்ற பிள்ளையாயினும் தன் தாய்நாட்டின் நலத்தை பேணவில்லையென்றால், அவனை மட்டுமல்ல; அவனை வளர்த்த தன் குடும்பத்தின் மானக்கேட்டை விலக்க தங்களையே தியாகம் செய்ய முன்வந்தனர் தற்காலப் பெண்களின் மரபினர் என்பதை மறக்கவோ அன்றி மறைக்கவோ ஒருவருக்கேனும் துணிவு பிறக்குமோ?

பழங்காலத் தமிழர், உழவு, வணிகம், போர், ஆகிய பலவற்றையும் ஒன்றாகவே போற்றி வளர்த்தனர். அதற்குப்பின் தோன்றல்கள் உழவுக்கே பெருவாரியான சிறப்பை நல்கி வாழ்ந்தனர். ஏன், தற்காலத்திலுங்கூட அவ்வாறு தான் கூறிக்கொள்கின்றனர் (ஆனால் செய்கையில்....!) "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று அண்மையில் கூறிப்போந்த 'பாரதி'யாரின் பாட்டே இதற்குத் தக்கச் சான்று.

'உழுபவனே உயர்ந்தோன்; உழுபவனே அரசன். இது பண்டைய அறிஞர்கள் கூறிய, ஆனால் அசைக்கமுடியாத வார்த்தைகளாகும், ஆம், உழவு இன்றேல் உணவு இல்லை; உணவு இன்றேல் உயிர்கள் இல்லை; உயிர்கள் இன்றேல் இவ்வுலக மில்லை! இது குறித்தே,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"
என்றும்,

"பலகுடை நிழலுந் தங்குடைக்
கீழ்க் காண்பரலகுடை நிழலவர்"

என்றும் 'திருவள்ளுவர்' வெகு செம்மையாக கூறியிருக்கிறார். இருப்பினும், இப்புகழுரை அத்தனையும் தற்கால உழவரிடத்தே என்னபாடு படுகின்றது என்பதை அவர்தம் (உழவர்) பரிதாப வாழ்வே நன்கு பகரும். ஏன் இந்நிலை மாறிற்று?

பிற்காலத்தே எழுந்த 'தெய்வீக' நூற்களெனப் போற்றப் படும், ஆரியர்களின் நயவஞ்சகச் சுவடிகளிலே உழவுத் தொழிலை நான்காம் வகுப்பிலே (வருணத்திலே) நாசுக்காகப் புகுத்தி விட்டார்கள். அதன் காரணமாக, உழவர்களை 'தீண்டப்படாதார்' என்று ஒதுக்கியதோடல்லாமல், அத் தொழிலையே இழிவென ஒதுக்கப்பட்டது. ஆகவே உழவுத் தொழிலும் நாளடைவில் நசிந்துபட வேண்டிய நிலைமையில் நிற்கிறது!

அவைகள் எங்கே?

சீரும் சிறப்பும் பெற்று சீரோங்கி வாழ்ந்த தமிழ் நாடு!—இமயத்தில் கொடி பொறித்து இறுமாப்புடன் வாழ்ந்த தமிழ்நாடு! — மாற்றரசர்களை தன் காலடியில் மண்டியிட்டு வாழும்படிச் செய்து அரசாண்ட தமிழ்நாடு! — வறுமையில் வாடி வதங்கும் வறியர்கட்குத் தனது வற்றாச் செல்வத்தை வாரி வாரி இறைத்து வள்ளலெனத் திகழ்ந்த தமிழ்நாடு இன்று எந்த நிலையிருக்கிறது?

அன்று, ஆடுமாடுகளை மேய்த்து வட இந்தியப் பகுதிகளிலே குடியேறவந்த 'ஆரியர்கள்' தமிழகத்தின் வளத்தினையும் மேம்பாட்டினையும் கண்டு, அவற்றினைச் சுரண்டி எண்ணங்கொண்டு, தமிழர் பால் பல பொய் புனைந்துரைகளை உண்டு பண்ணினார்கள். அதன் விளைவாக, வாளேந்திய கைகள் புற்களையும்—தருமம் செய்தகைகள் மண்ணோட்டையும்—தாணியோரால் "உடர்ந்தோர்" எனப் போற்றப்பட்டவர்கள் இன்று 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற இழிச் சொல்லையும் தமிழர்கள் தாங்கி நிற்கிறார்கள்! பண்டைய நிலையை எண்ணி கண்ணீர் வடிக்கிறார்கள்!

கண்ணீர் வடித்ததனாலாய பயனென்ன? ஆயினும் திராவிடர்கள் தாம் அடைந்து விட்ட கீழ் நிலையை உண்ணி, உரக்கத்தினின்று விழிப்புக் கொண்டு விட்டனர் என்பது மகிழ்ச்சிக்குரிய தாகும். பார்ப்பனர்களும் இந்நிலையை உணர்ந்து தம்முடைய வழி வகைகளை காலத்திற் கேற்ப திருத்தி அமைத்துக் கொண்டு 'எல்லாரும் ஒரு குலம்' என்ற முரசொலியுடன் முன் வர வேண்டுவது அவசியத்தினும் அவசியமன்றோ?

வாழ்க தமிழகம்!

வீழ்க ஆரியம்!

"உடுமலை பீரங்கி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்கட்கு முன்பணம் கட்டக் கூடிய ஏசண்டுகள் தேவை.

வேலூர் (வ. ஆ.)
வல்லம்
தஞ்சாவூர்
விருது நகர்
வந்தவாசி
திண்டுக்கல்

நிர்வாகி
"உடுமலை பீரங்கி"
சென்னை 3.

புரட்சிக் கவிஞரின் புதிய நூற்கள்.

காதலா கடமையா? ...	ரூ. 1-4-0
கடல் மேற்குமிழிகள் ...	,, 0-12-0
திருமணம் ...	,, 0-10-0
இருண்ட வீடு ...	,, 0-10-0
அகத்தியர் விட்ட புதுக் காடி ...	,, 0- 4-0
இந்தி எதிர்ப்புப் பாட்டு...	,, 0- 4-0
திராவிடர் திருப்பாடல்...	,, 0- 4-0

கிடைக்குமிடம்
பாரதி தாசன் பதிப்பகம்
95. பெருமாள் கோயில் தெருவு
புதுச்சேரி

அறிவிப்பு

விற்பனையாளர்களில் சிலர் எம்முடைய அறிவிப்புகளைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. இதை நாம் சற்றேனும் விரும்பவில்லையென்று பல முறையும் சொல்லி வந்திருக்கிறோம். அதனால் இதுவே கடைசி அறிவிப்பாகும்.

1949-ம் வருஷம் மார்ச் மாதம் முடிய ஏற்படும் பூராத் தொகையையும் பாக்கியில்லாமல், ஏப்ரல் மாதம் 5-ம் தேதிக்குள் எமக்குச் சேரும்படியாக அனுப்பித்துக் கொடுக்காத விற்பனைத் தோழர்களுக்கு மேற்கொண்டு பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்

அனுப்பாதவர்களின் பெயர்களும் ஊர்களும் இது வரை வெளியிடாததற்கு எம்மின் பொறுமையே காரணம், அப்பொறுமைக்கும் வரையுண்டு என்பதை அத்தகைய தோழர்கள் தெரிய வேண்டுவது மிகவும் அவசியம்

நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்
வாரப்பதிப்பு

சென்னை	சனி	2—4—49

பிரதமர்

திருவிழா நடந்தேறியது. சிலருக்கு மகிழ்ச்சி மற்றவருக்கு வீழ்ச்சி. பலருக்கு இதுவுமில்லை அதுவுமில்லை. வெறும் ஏமாற்றந்தான். இது தான் ஏற்பட்ட நிலை காங்கிரஸ் கக்ஷி தலைவர் தேர்தல் நாடகத்தில்.

அண்மையில் நடந்த தேர்தலில் குமாரசாமி ராஜா அவர்கள் 105 வோட்டுக்கள் பெற்றதால் அன்னவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எதிர்த்து நின்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் 89-வோட்டுகளே பெற்ற காரணத்தால் தோல்வி யடைந்தார் என்றாலும் கேவலம் 16-வோட்டுகள் வித்தியாசத்தில்தான் தோற்கடிக்கப் பட்டார் என்பது மிகவும் குறிப்பிட வேண்டியதாகும்.

எப்படியும் நாம் பல முறையும் எழுதி வந்தாற்போல் ஓமந்தூரார் மந்திரி சபையைக் கவிழ்க்க ஆதியிலிருந்தே நடந்துவந்த சதிவேலைகள் பலித்து விட்டன. ஓமந்தூராரின் ஆட்சி மாறுகிறது. ஓமந்தூராரும் இரண்டு வருஷகாலம் பதிவியிலிருந்து விட்டார். ஓமந்தூரார் "யோக்கியர்" என்ற நற் பெயருடன் விலகுகிறார் என்பதல்லாமல் நாட்டுக்கோ, மக்களுக்கோ, சமூகத்துக்கோ, சமுதாயத்துக்கோ எவ்வித நன்மையோ, நன்மை ஏற்படுவதற்கான வழி வகையோ அல்லது அறிகுறியோ ஏற்படாத நிலைமையில்தான் ஓமந்தூராரின் ஆட்சிமாறுகிறது. இது மாத்திரமல்ல, அதிகக் கேடுகளை விளைவித்தவர்களுக்கு அதிக சலுகைகளும் எவ்வளவுக்கெவ்வளவு சாத்மீக முறைகளைக் கையாண்டார்களோ அவர்களுக்கு அவ்வளவுக் கவ்வளவு கசையடி வைபவங்களும் கடுந் தண்டனைகளுந்தான் தாண்டவமாடின என்பதை பதவியிலிருந்து நீங்கும் இக் காலத்திலாவது ஓமந்தூராரே உணருவார் என்று நினைக்கிறோம்.

நாட்டின் செல்வ நிலையும், பலப் பலக் காரணங்களினால். நீக்கக் கூடியவைகளினாலோ, நீக்கக்கூடாதவைகளாலோ, சீர் குலைந்து விட்டதால் நாட்டு மக்கள் பலவித, வேண்டாத, நீக்கமுடிந்த, அறுவறுக்கத்தக்க, ஏழைகளைப் பாதிக்கும்படியாக, நடுத்தர மக்கள் வேதனையடையும்படியாக பற்பல புதுப்புது வரிகளால் ஈவிரக்கமன்றி தாக்கப்படும்படியான, துக்கரமான நிலையில்தான் ஓமாந்தூரார் அவர்கள் ஆட்சி மாறுகிறது.

இம்மாறுதல் சென்ற வருடத் தேருதலிலேயே ஏற்பட்டாக வேண்டியிருந்தும், திராவிடர் பார்ப்பனர் என்ற பிரசனையின் பேரில் மாத்திரமே ஓமந்தூரார் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பதை ஓமந்தூராரே பதவியிலிருந்த காலத்தில் மறந்திருந்தாலும் பதவியை விட்டு விலகவிருக்கும் இது சந்தர்ப்பத்திலாவது நினைத்தே தீருவார் என்பது எம்மின் துணிபு. இச் சந்தர்ப்ப நிலை எதிர்த்தவர் ஒரு ஆரியராக இருந்ததினாலேயே ஏற்பட்டதல்லாமல் இருவரும் திராவிடர்களாக இருந்திருந்தால் ஓமந்தூரார் ஆட்சி சென்ற வருடத்திலேயே சரியாயிருக்கலாம் எனவும் சொல்ல இடமில்லாமலில்லை.

இவ் வருடம் ஓமந்தூராரை எதிர்த்து ஒரு பார்ப்பனர் நின்றிருப்பாரேயானால் ஓமந்தூராருக்கு இப்பொழுதும் வெற்றி கிட்டியிருக்கும் என்பதை அச்சமின்றி சொல்லலாம். ஆனால் பார்ப்பன சகோதரர்கள் அவ்வளவுக்கு ஏமாந்தபேர் வழிகளல்ல. இவர்களுக்கு காங்கிரசுக்குள் எத்தகைய, எவ்வளவு மதிப்பிருக்கின்றதென்பதை நல்லவண்ணம் அறிந்தேயிருக்கிறார்கள். காலத்திற்குத் தக்கப்படி தம்மைச் சரிப்படுத்திக்கொண்டு உடனுக்குடனே பிறருக்கு கொக்காணி காண்பிக்கும் திறன் அவர்களுக்கு தனிப்பட்டதாகும். அதில் அதிசயத்தக்க தேற்சியும் அடைந்தவராவர். அடைந்த அனுபவத்தை மறக்கக்கூடியவர்களல்ல. ஆனால் ஆசையைமாத்திரம் அடக்க அவர்களால் முடியாது. எந்த ரூபத்தில் காட்டவிருக்கிறரென்பதை மாத்திரம் தற்போதைக்கு விட்டு வைப்போம். அதற்கான அறிகுறிகள் காணுமலில்லை. ஆயினும் பொறுத்திருந்து கவனிக்க வேண்டியது மக்களின் கடமை. ஆகவே தலைவர் பதவிக்கு நிற்பவர் ஒரு பார்ப்பனராயிருந்திருந்தால் அவர் அடைவது தோல்விதான் என்றதை உணர்ந்தே பாரப்பன சகோதரர்கள் எவரும் தலைவர் போட்டியில் கலந்து கொள்ளாமல் திராவிடர்களுக்கே விட்டுவைத்தார்கள். இந்நிலையில் ஓமந்தூரார் எதிர்ப்பேயில்லாமல் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என எண்ணி அதற்கான முயற்சிகளிலும் முன்கூட்டிய சந்தோஷத்திலும் ஈடு பட்டாலும் "போட்டியில்லை" என்ற எண்ணத்திற்கு ஆதாரம் இல்லை, போட்டியுண்டு, அதுவும் ஒரு திராவிடரால் என்றவுடன் ஓமந்தூரார் போட்டியில் கலந்துகொள்ளாமல் விலகிக் கொள்வதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே அவர் விலகி நின்றதென்பது ஒருவாறு போற்றத் தக்கதேயாகும் போட்டியில் கலந்திருப்பின் மிகக் கேவலமானமுடிவை அடைந்திருக்க வேண்டியும் ஏற்பட்டிருக்கலாம்.

இவைகளெல்லாம் சென்று போனவை. சென்றதை நினைத்து மனமுருகுவதினால் ஏற்படும் நன்மை ஏதொன்றுமில்லையாயினும் எதிர்காலத்தை நிர்ணயிக்க சென்ற கால அனுபவமே முக்கியம். அதே எதிர்கால நல்லரசாட்சிக்குத் தக்கதோர் அஸ்திவாரமாகும். ஆட்சியில் அமரவிருப்பவர் என்ன செய்யப்போகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாத விஷயமாகையால் அதைப்பற்றி முன் கூட்டியே எழுதவேண்டிய அவசியம் இது சமயத்தில் ஏற்படவில்லை என்று சொல்லி ஒருவாறு தப்பித்துக் கொள்வதே அறிவுடமையாகும்.

இதுவரையும் அதாவது ஓமந்தூரார் ஆட்சி காலத்தில் பத்திரிகைகளும் தலைவர்களும் அறிஞர்களும் அனுபவவாதிகளும் எழுதியவைகளும் சொன்னவைகளும் ஏதொரு வகையிலாவது ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன என்று சொல்லுவதற்கில்லாமல் "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்னும்படியான முரட்டு வாதந்தான் புரிந்துவந்தனர் என மிகக் கண்டிப்பாகச் சொல்லலாம்.

சில பத்திரிகைகள் எழுதியதைப் பற்றி சட்ட சபை அங்கத்தினர்களில் சிலர் கேட்ட கேள்விகளானது அக்குறிப்பிட்ட பத்திரிகை அல்லது பத்திரிகைகள் விளம்பரம் பெறுவதற்காகத்தான் பயன் பட்டனவேயொழிய மற்றொரு விசேஷமும் ஏற்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை. ஆட்சியாளருக்கு எடுத்துரைக்க வேண்டிய, எடுத்துக் காட்டவேண்டிய, ஆட்சியாளர் அனுசரிக்கவேண்டிய, ஒத்துக்கொண்டாக வேண்டிய அறிய கருத்துக்கள்பலவும்சில பத்திரிகைகளில் புதைந்து கிடக்க அவைகளையெல்லாம்விடுத்து எதைக்குற்றமாக்கலாம் என்ற நோக்குடன், குறுகிய மனப் பான்மையுடன் தேடித்திரிவதும், சபா மண்டபங்களில் கேள்விகள் கேட்பதும் நற்குறியாகவேயாகாது என்பது ஒருபுறமிருக்க அக்குறிப்பிட்ட பத்திரிகையையும் தன்னையும் விளம்பரம் செய்து கொள்ளவேண்டியே அவசியமில்லாத கேள்விகளிலும் விவாதங்களிலும் அங்கத்தினர்கள் ஈடுபடலாகின்றனா என்று கொள்ளும் சந்தேகத்துக்கு இனியேனும் இடந்தரலாகாது என்றே கேட்டுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஓமந்தூராரின் ஆட்சி மாறுகிறது. குமாரசாமிராஜா அவர்களின் ஆட்சித் துவங்கவிருக்கிறது. மாறும் ஆட்சியில் மக்கள் மனந்தேறி வாழ வழியேற்படும் என்றே ஏங்கி நிற்கின்றனர் எதார்த்த பொதுமக்களும் வரிசெலுத்துவோரும். அதற்கான அறிகுறிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

சமீபகாலமாக வடநாட்டவருக்கும் டெல்லிக்கும் குறிப்பாக தென்னிந்திய பார்ப்பனருக்கும் மிக நல்லபிள்ளையாக நடந்துகொண்டுவரும் ஒரு காமராஜரால் ஆதரிக்கப்பட்ட ஒருவர் தலைவர் போட்டியில் ஜெயம் பெற்றார் என்றும் இனி காமராஜர் ஆட்சியே நடைபெறும் என்றும் பொதுமக்கள் பேசிக் கொள்வதை கனம் குமாரசாமிராஜா அவர்கள் மிகவும் கவனிக்கவேண்டும்.

குமாரசாமி ராஜா அவர்கள் 16 ஓட்டுகளால் வெற்றி பெற்றார். ஆனால் டாக்டர் சுப்பராயன் அவர்களோ 9 ஓட்டுகள் இல்லாமையால் தோல்வியடைந்தார். இதிலிருந்து நாம் தெரிவது என்ன? குமாரசாமி ராஜா அவர்களுக்கு இருக்கும் ஆதரவுக்குத் தகுந்தாற்போல் எதிர்ப்பும் இருக்கிறது என்பதேயாகும். போட்டியெல்லாம் தேர்தலுடன் முடிவுபெறுவதெல்லாம் அந்நிய நாடுகளில் ஒருக்கால் இருக்கலாம். ஆனால் வைத்து சாதிப்பர் இறுதி வரை இந்நாட்டில். ஆதலால் இவ்வித எதிர்ப்பை யெல்லாம் சமாளித்து வரவேண்டிய பொறுப்பு ராஜா அவர்களுக்கு மிகவும் உண்டு என்பதை அவரே தெரிந்துகொள்ளவும் அனுபவிக்கவும் இருக்கிறார். இவ் வெதிர்ப்புகள் வெளிக்கும் காணப்படாமல் சிலநைஸான நாசுக்கானவேலைத்திறன்கள்வெளிக்கிளம்பலாம். பிறரையும் பிறகக்ஷிகளையுமே தாக்கிக் கொண்டிருக்கும்படியான நிலையையும் ஏற்படுத்தலாம், சபாஷ் என்றே பகரலாம் பார்ப்பனப் பத்திரிகைகள். இதையெல்லாம் யோசித்துஉண்மையைக்கண்டறிந்து நிலைமையைத் தக்கவண்ணம் சமாளிக்கத்தவறின் ராஜா அவர்களின் மந்திரிசபையாலும் மக்களுக்கு ஒருவித நன்மையும் ஏற்படமுடியாது என்று இப்பொழுதே சொல்லிவிடலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

இங்கர்சாலின் சிந்தனைச் சிற்பம்

சீர் திருத்தம்

(மொழிபெயர்ப்பு இரா. கேர்சோன்)

உலகைப் பூந்தோட்டமாக்க ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மனிதன் முயன்ருன். கடவுள்களைக் கற்பனைச் செய்தான். பேயைப் படைத்தான். மோட்சத்தை உருவாக்கினன். நரகத்தை நினைவிலே நிறுவினன். பரிசுத்தமானபுத்தகங்களை எழுதிக் குவித்தான். அற்புதங்களால் அவனியை நிரப்பினன். கோயில்களைக் கட்டினன் சிறைச்சாலைகளை நிறுவினன். அரசனை ஆண்டியாக்கினன். ஆண்டியை அரசனுக்கினன். மக்களைச் சிறையில் இட்டான். உயிருடன் தோலை உரித்தான்; எரித்தான். ஜெபம் செய்தான். கடவுளைப்பற்றி பிரச்சாரம் செய்தான். பயத்தைக்கொண்டுமுயன்ருன். லஞ்சத்தினுல்சாதிக்க முயன்ருன். பற்பலதுறையிலே புகுந்தான். மக்களை நற்குணத்தின் சின்னங்களாக, பெருந் தன்மையாளராக, பயனுற்றவர்களாக மாற்ற இவ்வளவு செய்யப்பட்டது அக்காலத்து மனிதனுல். மருத்துவ விடுதிகளைக் கட்டினன். கல்லூரிகளைத் திறந்தான். மண்டபங்களைக் கட்டினன். பள்ளிகளைப் புதுப்பித்தான். மக்களை முன்னேற்றப்பாதையிலே செலுத்த தன்னுல் முடிந்தவரை முயன்ருன். ஆனுல் அவன் கண்டது மறுக்கமுடியாத அளவுக்குத் தோல்வி.

என் அவனுக்குத் தோல்வி?

அறியாமையும், வறுமையும், கொடுமையும் உலகிலே உருவாகிக்கொண்டே வந்தன. தங்கள் வாழ்வையே சோக்கச் சக்கியற்ற மக்கள், குடிசைகளையும், மண்டபங்களையும், மாளிகைகளையும் குழந்தைகளால் நிரப்பினர். தருமம், யோகம், கடவுள் என்ற மூன்றின்மேல் தங்களது வாழ்வு பொருத்தப்பட்டிருப்பதாக எண்ணினன் மனிதன். பொறுப்பையும், காரண காரியத்தையும் கருத்திலே ஊன்றிப் பார்க்கமுடியாத அளவுக்கு அறியாமையின் வார்சாக விளங்கினன். குழந்தைகளை வெறுத் தொதுக்கினர் மக்கள். பெரும்பாரமாக எண்ணினர் பெற்றவர். ஆதரவற்ற குழந்தைகள் மருத்துவக் கூடங்களையும், சிறைச் சாலைகளையும்நிறப்பினர்.சிலர் 'தருமம்' என்ற தலைப்பிலே காக்கப்பட்டனர். ஆனுல் மிக ஏராளமான எண்ணிக்கை ஏந்துவாரின்றிக் கிடந்தது. காப்பற்ற குழந்தைகள் கொடுமையின்கருத்திலே தோய்ந்தன. மூர்க்கத்திலே மனதைப் பறிகொடுத்தன. அயோக்கியத்தனத்திலே வாழ்வை மலரச் செய்தன. இந்த மலர்ச்சி அக் குழந்தைகளின் பின் வார்சுகளுக்கு கல்வெட்டுக்களாகப் பயன்பட்டது. இத்தகைய கொடுமையின் காலத்திற்கெதிராக சீர்திருத்தங்கள் பலமற்றவைகளாகக் காட்சியளித்தன. தருமம்கூட கை தூக்கி விடமுடியவில்லை அவர்களை.

வாழ்க்கையின் முடிவு முழுவதுமே தோல்வி என்றபெட்டியினுள் மங்கிக் கிடந்தது. ஏன் இந்த நிலை? இயற்கைக்குத் திட்டமில்லை. இயற்கைக்கு அறிவு கிடையாது. ஓர் குறிக்கோளைக் கருதி இயற்கை உண்டாக்கவில்லை. கருத்துடன் குலைக்கவில்லை. சிந்தனையின்றி இயற்கை மாற்றம் கண்டது. மனிதனுக்குச் சிறிதளவாவது அறிவு இருக்கிறது. எனவே அவன் அதைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். பகுத்தறிவு மனித முன்னேற்றத்தின் செம்புகோல்.

கடுங்கருத்துக்காரரும், அறியாமைப் பிதாக்களும் உலகிலே தங்களின் குணத்தின் பிரதி பிம்பங்களான குழந்தைகளால் நிரப்பிக்கொண்டிருப்பதைத் தடுக்க இயலுமா? என்ற வினு அடுத்து எழுகிறது.

'மிசிசிபி' என்ற நாகரீக நதியிலே 'மிசௌரி' என்ற கொடுமையும் அறியாமையும் மிதந்துவரும் துணை நதி கலக்காது கரையிடமுடியுமா?

அறியாமையின் அணைப்பிலே மக்கள் எக்காலத்திலும் மகிழ்ச்சி காண வேண்டியதுதானு? காரண காரியங்களை கருத்திலே கொண்டு வாழ்க்கை நடத்தும் அளவுக்கு மக்களை நாகரீகப் பாதையிலே செலுத்த இயலுமா?

குழந்தைகளைப் பாதுகாக்கத் திறமையற்ற மக்கள் ஏன் குழந்தைகளை உருவாக்கவேண்டும்? ஏன் இந்த நிலை?

இத்தகைய மக்களைத் திட்டங்களால் மாற்ற முடியாது. துண்டுப் பிரசுரங்களால் தழைத்தோங்கச் செய்தல் இயலாது. சீர்திருத்தத்தின் கத்தி இவர்களின் முன் மழுங்கிவிட்டது. குற்றவாளிகள் குவிகின்றனர்; அயோக்கியர் அளவிலே அதிகரிக்கின்றனர்; வறுமையாளர்கள் வீதியிலே கூட்டமிடுகின்றனர். சிறைச் சாலையிலே இடமில்லை; இருட்டறைகளிலே இடமில்லை; எங்கும் கூட்டம். சட்டம் தண்டிக்கலாம்; ஆனுல் குற்றவாளிகளைச் சீர்திருத்தவோ, குற்றங்களைக் குறைக்கவோ சட்டம் இயற்றிய மனிதனுல் முடியாது. கடுஞ் செயலின் நீரோடை பெருக் கெடுக்கின்றது.

(8-ம் பக்கம் பாக்க)

(தலையங்கம் தொடர்ச்சி)

இதே சந்தர்ப்பத்தில் ஒரு சின்னஞ்சிறு விஷயம், விஷய சம்மத மற்றதுதான். ஆனுலும் புதிதே பாரத்தை ஏற்கவிருக்கும் ராஜா அவர்கள்கவனிக்கவேண்டியதாகும் சமீபத்தில் மத்திய சர்க்காராறும் மாகாண சர்க்காராலும் வெளியான வரவு செலவு திட்ட விவரங்களிலிருந்து ஏழை மக்கள் மத்திய சர்க்காராலும் மாகாண சாக்காரா லும் இவர்கள் இருவர்களாலுமே பாதிக்கப்படுகின்றனர் என்பதை எவரும் மறுக்கவே முடியாது. அவசியம் அவசியமின்மையைப்பற்றியோ தாரதம்மியத்தைப்பற்றியோ நாம் எழுத முற்படவில்லை. பொதுவாக, வெளிப்படையாக மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் ஏழைகளையே வாட்டுவிடுகின்றனர்என்பது மாத்திரம் வெளிப்படை. அப்படியிருக்க பத்திரிகைகள் சில ஓமந்தூராரின் சர்க்காரை மாத்திரம் தாக்கவேண்டிய காரணமென்ன? மத்திய சர்க்காரை போற்றி எழுத வேண்டிய அவசியமென்ன ? என்பதைக் கவனிப்பின் உண்மைகள் பலவும் புலப்படும் என்பதில் ஐயமில்லை. தேவதாசிசட்டத்திற்கு எதிர்ப்பில்லாமல் கைதூக்கவேண்டியகாரணமென்ன? இந்துமத அறநிலை பாது காப்பு சீர்திருத்த மசோதாவை எதிர்க்கவேண்டிய அவசியமென்ன? ஜமீன் ஒழிப்பு மசோதாவை ஆதரிக்கக் காரணமென்ன? இனும் ஒழிப்பு மசோதாவை இருக்குமிடம் தெரியாமல் ஒழித்துவிட்ட காரணந்தானென்ன? எல்லாரும் சமஅந்தஸ்து அடைவதற்கான, நல்லதோர் திட்டமான வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை கண்டிப்பதின் மருமமென்ன? இவைபோன்ற விஷயங்கள் பலப்பல. எதிர்ப்புகளில் அடங்கியிருக்கும் நோக்கத்தையும் கருத்தையும் விஷமம் என்று கொள்வதா அல்லது அவரவரின் சுயநலமென்று தான் சொல்வதா என்பதை ராஜா அவர்களே சற்று சிந்தித்து காரியா காரியங்களில் மிக ஜாக்கிரதையாக இறங்கினுலே மக்களுக்கும், நாட்டுக்கும் நல்லது சிறிதளவாவது செய்ய முடியுமே தவிர பிறரை நம்பியோ, வட நாட்டுக்கு வணங்கியோ, தேர்தலில் ஆதரித்தோர் என்பதற்காக விட்டுக் கொடுத்தோ, வகிக்க வேண்டிய நடு நிலையிலிருந்து வழுவியோ, தனது கக்ஷி என்பதற்காக உண்மைகளைக் கவனியாமலோ காரியங்களைச் செய்ய ஏற்படுவாரேயானுல் நன்மையேற்படும் என நம்பியிருக்கும் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுக்கும் என்பது மாத்திரமல்ல, ஏற்கனவே பலகஷ்ட நஷ்டங்களால் தாக்குண்டு தவிக்கும் மக்களின் நல்லாசியும் நல்லாதரவும் கிடைப்ப தென்பது குதிரைக் கொம்பாகவே முடியும் என எச்சரிக்கின்ருேம்.

மன்னிப்பு

சென்ற இரு வாரங்களாக பத்திரிகை வெளி வராததற்கு ஏற்பட்ட காரணங்களை விளக்கியாக வேண்டிய கடைமை எமக்கிருந்தும், நாங்கள் உணர்ந்தும், அவ்விதம் இது சமயம் செய்ய முடியாமைக்கு மிகவும் வருந்துகின்ருேம். ஆயினும் வெளிவராததற்குக் காரணம் அச்சகத்தாரே என்று மாத்திரம் தெரிவித்துக் கொள்வதுடன் நேயர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பொருட் படுத்தாமல் பத்திரிகையை ஆதரித்தருள வேண்டுமென சிரம் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிருேம்.

அழகிரியே மறைந்தா விட்டாய்?

க. மாணிக்க வாசகன்

தன்மான உணர்ச்சியது அற்று மக்கள்
தழும்பேறி மூடக்கொள்கை சூழ்ந்த நாளாம்
அன்றைக்கு ஆயிரத்துத் தொளாயி ரத்து
ஆண்டுஇரு பத்துநான்கில் பெரியா ரோடு
முன்னேடும் பிள்ளையதாய் சொற்போர் தந்து
முடிக்கிவிட்ட அழகிரியே! அதுதா னின்று
என்னேடு திராவிடமே என்றும் கேட்க
எழுப்பியது ! எழுப்பியநீ மறைந்தா விட்டாய்?

பழமையதை சாடிவரும் பெரியா ரோடு
பல்லாண்டாய் பகுத்தறிவை பரப்பி நீதான்
சழக்கரால் சொல்லடிக்கும் கல்ல டிக்கும்
சளையாத உளம்பெற்று தமிழ்நாட் டாருக்கு
முழக்கினுய் போர்முரசு இருபத் தாண்டாய்
முரசுகேட்டு துடித்தெழுந்த நாங்கள் காணு
அழகிரியே! தளபதியே! அறிவுப் பூக்கும்
அருந்தமிழின் பொதுச்சொத்தே மறைந்தா விட்டாய்?

ஈரைந்து ஆண்டுக்கு முன்னு ளந்த
எருமைக்கடா இந்தியது நுழைந்த நாளில்
யாருக்கு இந்தியடா என்றுச் சேனை
எழுப்பிவந்தாய் தமிழ்நாடே திகைக்கு வண்ணம் !
போருக்கு மார்பளிக்கும் தமிழர்க் கந்நாள்
புதுமுறுக்கு ஏற்றினுய் ! இற்றை நாளும்
வேர்துளிர்க்க வருகின்ற இந்திப் பேயை
விரட்டுதற்கு இல்லாமல் மறைந்தா விட்டாய் ?

ஈரோட்டு பாசறையில் எழுந்த எங்கள்
இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப் பற்றை
போராட்டப் புதுமலரை மணக்கும் வண்ணம்
புரிந்துபல சேவைக்குத் திராவி டத்தார்
பாராட்ட அழகிரியே என்னுங் காலை
பலத்தவொரு நோய்வாய்ப்பில் மறைந்தா விட்டாய்?
நீரோட்ட பணமற்ற வறுமை பூண்ட
நிலைத்தபுகழ் அழகிரிப்பேர் நிலைத்து வாழ்க!

ஒரு துளி

(அவலூர்பேட்டை அ. இளமுருகு)

நாட்டிலே நல்லொழுக்கம் செழித்து, ஆஸ்திகம் தழைக்க அற நிலையங்களை அமைத்தனர் அன்றைய நாட்டின் காவலர்கள்.

மக்களின் செல்வம் மங்கிவிடாமல் காக்க, ஆட்சி புரிந்த அரசனின் அறிகுறியென பிற்காலம் காணவும், சரித்திர சின்னமென சான்றுக்கு நிற்கவும், மன்னனின் ஆட்சி முறையை மக்கள் உணரவும், நாட்டின் கலைகளை நன்குணர்த்தவும் 'ஆண்டவன் அடைப்பிடம்' என்ற கோயில்களையும், மக்களுக்கு அறிவு வழி நின்று ஆத்மீகத்தைக் கற்பிக்கவும், 'ஆண்டவனின் அருள்' என்னும் கற்பனை நோக்கத்துடனே திரண்டு வரும் அயலூர் வாசிகள் அமர இடமளிக்க 'அற நிலையங்கள்' என்ற மடங்களையும், அதை நிர்வகித்து நடத்த ஒரு தலைவனையும் அன்றைய மக்கள் வழி நின்ற அரசர் ஏற்படுத்த எண்ணங் கொண்டனர்—ஏற்படுத்தினர் ஆனால்............பயன் (?) நோக்கம் வேறு பயன் வேருக முடிந்தது. அதை உணர்த்துகின்றது இன்றைய வஞ்சக (வைத்திய நாதய்யர் களின் பைத்திய) நிலை

மக்களின் 'மதி' மங்கிவிடாமல் காக்க அற நிலையங்களை ஏற்படுத்திய அன்றைய அரசர்கள்இன்றைப உருஞ்சி உண்டு ஏப்பமிட்டு வாழும் உலுத்தர்களாம் இம்மடத்தலைவர் களைக்கண்டால் வருந்தி கண்ணீர் விடுவார். ஏன்! வாள் கொண்டும் தகர்த்தெறிவர்.

அரசர்களின் அடிமை வாழ்க்கைக்கு ஆளான மக்கள், அன்று உணரவில்லை ஆரியத்தலைவர்களின் அற்புதச் சூழ்ச்சிகளை, உணர்ந்தும் நா எழவில்லை பேச; பேசினும் கேட்பாரில்லை.

ஆனல் இன்று,ஆயிரத்துதொளாயிரத்து நாற்பத்தி ஒன்பதாம் காலம், பகுத்தறிவுத் தந்தை பவனி வரும் காலம், அறிஞர் அண்ணா அறிவுரை தரும் காலம், தன் இனம் உணர வீரத்திராவிடர் விழித்தெழும் காலம், இப்படிப் பட்டகாலத்திலே ஒரு திராவிடர் அமைச்சர் பதவியை அலங்கரித்தால் கேட்கவா வேண்டும்.

"அறநிலையங்களை அமைத்த அரசர்களின் நோக்கம் வேறு; அவர்களின் நோக்கத்திற்கு ஏற்ற பயன் இதுவல்ல" என்பதை உணர்த்தினல். "மக்களின் செல்வம் மங்குகிறது இம்மடத்தலைவர்களிடம்" என்று மனம் பதைக்கக்கூறினர் "நாத்திகம் வளருகிறதே இந்த நாசகார கும்பலால்" என்று நாத் தழதழக்க கதறினர்.

கேட்டனர் திராவிடர், விழிப்புற்றனர். மண்டூக மடத்தலைவர்களின் மதியிலாச் செய்கைகளை உணர்ந்தனர். நம் செல்வம் கொள்ளைபோக நாம் பார்த்துக் கொண்டு வாளாயிருப்பதா! என குமுறினர். குமுறிக்கொண்டே இருக்கின்றனர்.

கண்டனர்—கேட்டனர் மடத் தலைவர்கள். முகத்தில் ஈயாடவில்லை, முகமில்லை நடுத்தெருவில் நடமாட. 'உருஞ்சி உண்டு வாழ்ந்த நாம், உழைத்து எப்படி உண்பது' என்பதை உணர்ந்தனர். முடிவு தேடினர் அமைச்சர் ஆணையை கவிழ்க்க. "மதச்சார்பு அற்ற சர்க்கார் எனக் கூறும் நீங்கள் எங்கள் செய்கையில் தலையிடக்கூடாது" என்ற ஒரே வழியில் எதிர்க்கின்றனர்.

அஞ்சவில்லை அருமை அமைச்சர், நல்ல சாட்டைதந்தார் நயவஞ்சக நாசகாரர்களுக்கு "நாங்கள் மதத்தில் தலையிடவில்லை, ஆனல் மதம் தான் எங்களைத் தலையிடச் செய்கிறது என்று. மறுபதில் கூற மனமில்லையோ அல்லது தெரியவில்லையோ மவுனம் சாதிக்கின்றனர். ஆனல் அக்ரகாரக்குஞ்சுகள் அலருகின்றன. ஆம், உண்மையிலேயே அழுகின்றன. ஆனல் வருங் காலத்திலே மக்களை மாக்களாக்கும் கோவில்களையும், மடங்களையும் நிர்மூல மாக்கப்படும் என்பதை இந்த அழும் ஆரியக் குஞ்சுகள் அறிந்தால் தற்கொலை செய்து கொண்டாலும் கொள்ளும்; என்னவோ அவர்களின் தாய் தந்தையர்கள் மத்திய ஆசியாவிலே யிருந்து மடி நிறையக் கொண்டுவந்ததாக இருக்கலாம். யார் கண்டது!!

இன்றைய நிலை நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு. பகுத்தறிவுத்தந்தை பதை பதைக்கக்கூறினர். இடித்தும் காட்டினர். உணரவில்லை ஆட்சியினர். அலட்சியப் படுத்தினர் அவரின் அறிவுரையை. பொதுக் கூட்டங்களை நசுக்க நூற்று நாற்பத்தி நான்கு தடை உத்திரவு என்ற ஆயுதத்தை ஏந்தினர். ஆனல் அவை நம் பொறுமை கேடயத்திலே பட்டு மழுங்கி விழுந்து மடிந்தன.

அன்று தந்த அறவுரை அமுதத்தின் ஒரு துளி தான் இன்றைய அறநிலை பாதுகாப்பு மசோதா. ருசிக்க முனைகின்றனர் ஆட்சியாளர். பின்பு அறிவர் அமுதத்தின் சுவையை—அறவுரை கர்த்தாவை.

கம்பன் மீது போர்

காமாந்தக்காரக் கம்பன்

[கரூர். சுந்தரன்]

கம்பர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவராயினும் சடையப்ப வள்ளலினல் ஆதரிக்கப்பட்டு அவருடைய குடும்பத்தில் ஒருவனகவே ஒன்றுபட்டிருந்தார். ஆகவே, கம்பருக்கும் வறுமைக்கும் சிறிதுகூட தொடர்பில்லை. செல்வத்தில் மிதந்த வள்ளலிடம் புகுந்தவராதலின் இவரும் செல்வாக்குப் பெற்றூர். சமயம் வாய்த்த பொழுதெல்லாம் வள்ளலை—ஒவ்வொரு புலவரும் செய்ததுபோல—வான் அளாவ புகழ்ந்து கவிதை புனைந்தார். இத்தகைய செல்வ நிலையில்தான் கம்பர் ராமாயணம் பாடியது. நாம் ஏதாவது ஒரு காரியம் செய்து விடுவோமானல் அது முடிவுறும் விதமானது நம் சூழ்நிலை எப்படி யிருந்ததோ அதைப்பொறுத்தே யிருக்கும் என்பதை எவராலும் மறுக்க இயலாது. காட்டு விலங்குகளிடையே பழகிய மனிதன் தன் மனித இயல்புகளை இயல்பாகவே மறந்து பழகும் மிருகத்தின் நடத்தைக்கு ஒத்து விடுகிறுன். இதனைநாம் அறிவோம். இது போலவே தான் கம்பனும்—சுக போக வாழ்க்கை நடத்தி வந்த கம்பர். ராமாயணம் புனையும் காலத்து, சுக (இன்ப - காம) உணர்ச்சிகளை மிகுதிப்படுத்தி காவியம் புனைந்ததும் இயல்பே.

கம்பன் காவியத்தில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் காம உணர்ச்சிகள் வெளிப்பட்டுள்ளன. காதலன் தன் காதலியினிடத்து மகிழும் காலத்து—அதனை காவியமாக புனைய வேண்டிய காலத்து—அவ்வுணர்ச்சிகளை நயம்பட, சுவைபட கூறவேண்டியது அவசியமே, ஆனல் நம் கம்பனிடத்துஇத்தகைய பாகுபாடுகள் கிடையாது. ராமன் சீதையுடன் மகிழும் காட்சியில் ஏற்படும் உணர்ச்சிகளையும், மனம் மிக வருத்தமுற்று சகோதரனைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் செல்லும் பரதனின் மனநிலையின் உணர்ச்சிகளையும் ஒரே அளவாகத் தான் வருணிப்பார். மகிழ்ச்சி பொருந்திய அரண்மனையை வருணிப்பதிலும் துயரம் நிறைந்த மக்களின் மனநிலையை வருணிப்பதிலும் வித்தியாசம் கிடையாது. அவர் கட்டிளங் குமரிகள் மீதும் காடு செல்ல விருக்கும் கிழவியர் மீதும் காமக் கவிகள் பாடுவதில் சமர்த்தர். இத்தகைய ஆபாசங்களை அம்பலப்படுத்தி விட்டார் நமது அருமை அண்ணா.

"ராமாயணத்தில் கம்பனின் கவிகள் காமக் களஞ்சியங்களானல் உங்கள் அண்ணாதுரை எழுதிய 'ரோமாபுரி ராணிகள்' மட்டும் என்னவாம்? என்று சீறுவார் ஒரு கம்பன் அடிவருடி.

"ரோமாபுரி ராணிகளி"ல் மிகப் பெரிய ராஜ்ஜியமாக இருந்த ரோம் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த சில ராணிகளின் அடாதசெய்கைகள் நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளன. இவ் வரலாற்று நூலில் இருந்து ஒருவாறு ரோமர்களின் அழிவுக்கு காரணம் அறியலாம். "ராணிகள் மிகவும் மோசமாக வருணிக்கப்பட்டுள்ளனர்", என்ருல் அதற்கு காரணம் அண்ணாவல்ல. 'ராணிகளி'ன் நடத்தைகளேயாகும். அத்தகைய நிகழ்ச்சிகளை குறிப்பிடும் இடத்தும்கூட மிகவும் ஜாக்கிரதையாகவே பதப்பிரயோகம் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அண்ணாவின் 'ரோமாபுரி ராணிகள்' ரோமாபுரி அழிந்த வரலாற்றை அறிவிக்கின்றதே யன்றி அந்த 'ராணிகளை' அம்மன்களாகவும் அவர்களுடன்கூடிய 'அரசர்களை' 'கடவுள்களாகவும்' ஆக்கி அவைகளுக்கெல்லாம் பெரிய பெரிய கோவில்கள் கட்டச்சொல்லியோ அவற்றை வழிபட்டு வீடு (சொர்க்கம்) பெறுங்கள் என்றோ அவர் உபதேசிக்கவில்லையே? மிக்க பெருமை பொருந்தியதாகவும், மதிப்பிலும் செல்வாக்கிலும் மேம்பட்டதாயும் இருந்த அத்தகைய ரோம சாம்ராஜ்ஜியமே 'ராணிகளின்' இழிந்த செய்கைகளினல் அழிவுற்றது. ஆகவே மாந்தர்களே அத்தகைய இழிச் செய்கைகளில் ஈடுபடாதீர்கள்—இகழ்ச்சி யடையாதீர்கள்—என்று எச்சரிக்கும் ஒப்பற்ற நூலே அண்ணாவின் 'ரோமாபுரி ராணிகள்'. நிற்க. கீழ்காணும் எடுத்து காட்டுகளை இத்துடன் ஒப்புநோக்கி 'கம்பன்மீது போர்' சரியா? தப்பா? என்று தீர்ப்புக் கூறும்படி நம் அண்ணாமீது போர் தொடுக்கும் தோழர்களையும் பிற 'கம்பன் தாங்கி'களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாவின் இயல்கண்டு பல

பாடித்தெளிந்து பெருங்

(ஸ்தாபிதம் 1931.) டெலிபோன் 2597

B. R. & SONS.

33, திருவேங்கிட முதலித் தெரு,
பேரியமேட்டு, சென்னை 3.

பேரியமேட்டு சப்-ரிஜிஸ்தராபீசுக்கு அடுத்த மேல்புறத்துச் சந்து

- எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
- தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்.
- பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
- ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
- சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
- சொத்துக்களின் பேரில் கடன்கள் பெறல்,
- கிரயங்கொள்வதற்கும், விற்பனை செய்வதற்கும்.
- ஏலம் போடுதல்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும் உண்மைக்கும் தகுந்த இடம் இதுவே.

காவியத்தைப் பாடிக் கவிஞர்
அரங்கேற்றுதல் போல்
முந்தச் செலுங் கமலத்துள்ளே
முளைத்தெழுந்தோன்
தந்தச் சிமிழ் படைத்துத்
தளவட்டந் தான் படைத்து,
வம்பை சமைத்து வடிவுகண்டு
மால் யானைக்
கொம்பைச் சமைத்துக் குணஞ்
சுற்றதிலறிந்து,
தேங்காயைச் செய்து திரட்சிகண்டு
பெற்குடத்தைப்
பாக்காகச் செய்து பனைப்பதிலே
கண்டறிந்து,
விந்தைதரு மேருமுதல் வெற்
பெல்லஞ் செய்தவன் கை
வந்ததற் பின் உங்கள் வனமுலை
யைச் செய்தானோ?
காமன் இமையாமல் வைத்த கண்
கறுப்புப் பாய்ந்ததுவோ
வாமமுலைக்கண்கள் மணிக்
கறுப்பை என்சொல்வேன்!
சூரியனும் சந்திரனும் தும்பிமுகத்
தோனும் உங்கள்
பாரமுலையின் பகையடக்கவே
பிறந்தார்?

இவை சுப்பிரதீபக் கவிராயர் எழுதிய ‘கூளப்ப நாயக்கன் காதல்’ என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ள ஓர் சிறு பகுதியாகும்.

‘கம்பனுக்கு நான் என்ன மட்டமா?’ என்ற முறையில் அல்லவா எழுதப்பட்டுள்ளது என்று நினைக்கலாம்.

மேலே வருணிக்கப்பட்டுள்ள உவமைகள் சரியான உவமைகள் தான்.

அதாவது கவிஞர் சிறுபாடல்களையும் பிரபந்தங்களையும் பாடிப் பழக்கம் வந்த பின்னரே பெருங் காவியம் செய்து அரங்கேற்றுவர். அதுபோல பிரமனும் சிமிழ், தளவட்டம், வம்பு முதலியவற்றை படைத்துப் பழக்கம் வந்த பின்னரே கொங்கையைப் படைக்கத் தலைப்பட்டான் என்கிறார் கூளப்ப நாயக்கன் வாயிலாக சுப்பிரதீபக் கவிராயர்.

‘உவமை பொருந்துவதாயினும் அருவெருக்கத் தக்க முறையிலே உள்ளதே’ என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இத்தகைய அருவெருக்கத் தக்க முறையிலே கவிராயர் கவிதை புனைய வேண்டியதின் காரணம் என்ன? காரணத்தை ‘கூளப்ப நாயக்கன் காதலு’க்கு அரிய முன்னுரையும், குறிப்புரையும் எழுதியவரும் பதிப்பாசிரியருமாக இருந்தவருமாகிய மு. அருணாசலம் அவர்கள் விளக்குகிறார்.

முன்னுரையில் அவர் கூறுவதாவது:—

இக்காதற் பிரபந்தத்தை படிக்கும்பொழுது அதன் கதைப்போக்கில் களவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறியிருப்பதை மட்டுமின்றி, அதில் அடங்கியுள்ள வருணனைகளில் அருவெருக்கத் தக்க அளவுக்கு சிருங்காரச் சுவையே மலிந்திருப்பதை காண்கிறோம். இப்பிரபந்தம் எழுந்தகாலத்தில் தமிழ் நாடு இருந்த நிலையை ஆராய்ந்து பார்த்தால், இதன் காரணத்தை உணர்வது எளிதாகும்.

பழந்தமிழ் மன்னர் எவரும் இல்லை. ஆகவே, இவர்களுடைய புலமையைத் தக்கபடி அறிந்து போற்றுவாருமில்லை. ஆங்காங்கே சிற்றரசர்களைப்போல வாழ்ந்த பாளையக்காரர்களையே இவர்கள் தேடிப் போகவேண்டியவர்களானார்கள். பாளையக்காரர்கள் பெரும்பாலும் நாயக்க பரம்பரையினர், (பாளையக்காரர்கள் என்போர் இக்காலத்திய சமீன்தார்களை ஒத்தவர்கள் ஆவார்கள்.)

இப்பாளையக்காரர்கள் சிற்றின்பத்திலே பெரிதும் ஈடுபட்டவர்கள். ஆகவே, புலவர்கள் தங்கள் புலமையை இவர்களிடம் காட்டிப் பரிசில் பெறமுயல்வதைவிட, சிற்றின்ப சுவை மலிய பாடல் பாடி இவர்களைப் போற்றினால் இவர்களை எளிதில் மகிழ்விக்கலாம் என்று கண்டார்கள். இதன் பயனாக எழுந்த பாடல்களிலே ‘காதல்’ என்ற பிரபந்த வகையும் ஒன்றாகும். ‘உடலோடு உலவுகின்ற மன்மதன்’ என்று தலைவனைப் புகழ்ந்து அவனைக் கண்டு ஒருபெண் காமுற்றாள் என்று பாடினால், அப்பாட்டிலே இந்தத் தலைவன் கவிச்சுவையைக் காணாவிட்டாலும், சிற்றின்பச் சுவையையாவது கண்டு அதில் ஈடுபட்டு தங்களுக்கு பரிசில் அளிப்பான் என்பது புலவர்களின் எண்ணம்.

சுப்ரதீபக்கவிராயர் காரணம் கருதியே இங்ஙனம் காமக் காவியங்கள் புனைந்தார்.—இப்பொழுது விளங்குகிறதா.

‘கம்பன் மீது பேசா’க்கும் இதற்கும் சம்பந்தம் என்ன?

சுப்ரதீபக் கவிராயர் தமது தலைவனை வான் அளாவ போற்றிப் புகழ்ந்தும், சிற்றின்ப சுவைப்பட வாழ்த்தியும் உள்ளார். ஆனால் அவரை ‘கடவுளாக’ ஆக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் நமது கம்பர் தம் ராமாயணத்தில் பாத்திரங்களை இழிகுண சித்திரங்களாக வருணித்தும் அப்பாத்திரங்களையே “கடவுள்” களாக ஆக்குகிறார். இது என்ன மடமை.

இனி கூறுங்கள் ‘கம்பன் மீது போர்’ சரியா? தப்பா?

“உடுமலை பீரங்கி”

—

விளம்பரம் சேகரிக்க திறமையுள்ள ஏஜெண்டுகள் தேவை. விபரங்கட்கு எழுதவும்.

நிர்வாகி.

உடுமலை பீரங்கி. சென்னை. 3.

கோவிலிலே (சொல்திரட்டு)

(த. பொன்னம்பலம்)

★

அடிமை வளர்தலும் கோவிலிலே
பகுத்தறிவு கெடுதலுங் கோவிலிலே
நம் கடமையை மறத்தலுங் கோவிலிலே
கருங்கல்லை தொழுவதுங் கோவிலிலே
சோரம் விளைவதுங் கோவிலிலே
பிறர் தாரம் பதுங்குவதுங் கோவிலிலே
பெருந் தாசிகளுற்பத்தீங் கோவிலிலே
பட்டப்பகல் கொள்ளையுங் கோவிலிலே
நம்பணம் பறிபோவதுங் கோவிலிலே
பார்ப்பன ஆட்சியுங் கோவிலிலே
பார்ப்பனீய பாபச்செயலுங் கோவிலிலே
நம்மை ஏய்த்து வாழுங் கூட்டமும் கோவிலிலே
நாம் ஏமாற்றப்படுவதுங் கோவிலிலே
பார்ப்பனீயம் தொந்தி பெருகுவதுங் கோவிலிலே
வடகலை தென்கலையுங் கோவிலிலே
மதவாதம் போராடுவதுங் கோவிலிலே
உண்மை உணர்ந்தவர்கட்கு இடம் இல்லை
கோவிலிலே

கடவுள் கல்யாணங்களும் கோவிலிலே
காமத் திருவிழாக்களுங் கோவிலிலே
கொலைகள் நடப்பதுங் கோவிலிலே
பல குடிகாரர் வாழ்வதுங் கோவிலிலே
பெருஞ் சிலவில் திருவிழாவும் கோவிலிலே
இந்த தேசம் பாழாவதுங் கோவிலிலே.

நாட்டு நடப்பு

கைவிடப்பட்ட திட்டம்!

(மா. சு)

ராமபாதசாகர் அணைக்கட்டு வேலை சென்ற மூன்று வருடங்களுக்கு முன் துவக்கப்பட்டு நடந்து வந்தது. இது ஒரு மாபெரும் திட்டம்; நாட்டுக்கு நலம் தரக்கூடிய-நாட்டை வளமாக்கக் கூடியதிட்டம்.

இதைக் கட்டி முடிக்க ஏறக்குறைய 130 கோடி ரூபாய்களும், 19 ஆண்டுகளும் தேவைப்படும். இந்த நாட்டு கலைவல்லுநர்கள் (என்ஜினீயர்கள்) மட்டுமல்லாமல் 200, அமெரிக்க வல்லுநர்களும் இதில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நாட்டில் உற்பத்தியாகக் கூடிய சிமெண்டு இரும்பு அத்தனையும் இந்தத்திட்டத்திற்கே ஒதுக்கப்பட வேண்டியிருந்தது.

இப்போது இத்திட்டத்தை தற்காலிகமாக சென்னை சர்க்கார் கைவிட்டு விட்டனர். ‘மத்திய அரசாங்கத்தினர் உதவி கிடைக்காததால் இதை இப்போதைக்கு நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று’ என சென்னை அமைச்சர் சொல்லுகின்றார். ‘உடனடியாக பலனளிக்கக் கூடியதல்ல; ஆகையால் நிறுத்தி வைக்கவேண்டியது தான்’ என்று மத்திய சர்க்கார் சொல்லுகிறது.

டில்லி சர்க்காரைக் கலந்தாலோசித்த பிறகு தானே, இந்தத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது?

இப்போது இதை நிறுத்தவேண்டியக் காரணமென்ன?

இதுவரை அவ்வேலைக்கு செலவழிந்த பணம், இனி இது துவக்கப்படும் வரை முடங்கித்தானே கிடக்கும்?

வேறு சில திட்டங்களுக்கு இப்பணத்தை செலவிட்டிருந்தால், இதற்குள் பலனைக் கண்டிருக்கலாமே!

‘அன்னை பாரதமாதா’வின் அருந்தவப்புதல்வர்களுக்கு மூன் யோசனையே கிடையாதா?

திராவிடமே! நீ என்று தான் இவர்கள் பிடியிலிருந்து விலகுவாயோ!

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

சந்தா விபரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

தனிப் பிரதி	ரூ. 0-1-3
6 மாதங்களுக்கு	ரூ. 3-0-0
1 வருஷத்திற்கு	ரூ. 5-0-0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

காரியாலயம்

33, திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை.

★

எல்லா ஊர்களிலும் கிடைக்கும்:

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கப்பூர், பினங், சிலோன்; ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றும் வெருட்டி அடிக்கப்பட்டு இன்று சென்னைக்கடற்கரையிலேசோகமேஉருவாய் போக்கிடமின்றி தவியாய்த் தவிக்குங் கும்பலைப் பாரீர்! பரந்த நிலப்பரப்பையும்! பொன்னியாறு போன்ற வற்றா நதிகளையும் பொன் விளையும் நிலங்களையும் பெற்றிருக்கும் இத்திராவிடத்தில்—அவர்கள் பிறந்து வளர்ந்த தாய் நாட்டில் பிழைக்க வகையின்றி வேற்று நாடுகளுக்கு திரைகடலோடிச் செல்வக் காரணமென்ன? சின்னஞ் சிறு நிலம் படைத்த ஏழைக் குடியானவர்களின் நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்து பெரிய மிராசுகள்—பண்ணைகள் ஏற்படக்காரணமென்ன? வட நாட்டு மார்வாடிகளும் காபூல் காரர்களும் சுரண்டும் திட்டத்தோடு நம்நாட்டில் வந்து குடியேறி சௌகார் பேட்டைகள் தோற்றுவிக்கக் காரணம் என்ன? சிந்தித்துப் பாருங்கள்! அதிக வட்டியின் பெயரால் கடன் வாங்கி, வாங்கிய தொகைக்குமேல் வட்டிக் கொடுத்த காரணத்தால் கடனைத் திருப்பிக் கொடுக்க வழியின்றி நிலங்களைப் வீடுகளையும் வீட்டிலுள்ள பாத்திரங்களையும் இழந்து விட்டு தவிக்கும் பாட்டாளிகளின் குடும்பம் எவ்வளவு இந்தநாட்டில்! பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்மூலமாக்கப்பட்டிருப்பதை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக் காட்ட முடியுமே!

ஊர்பேர் தெரியாத - நாட்டு மக்களுக்கு நன்றாக அறிமுக மாகாத நாடோடிப்பயல்களான மார்வாடிகளும், காபூல்காரர்களும், வட்டியின் பெயரால் அதிகத் தொகையை-திருப்பிக்கொடுக்க சக்தியற்றவன் இவன்—என்று அறிந்துங் கூட கடனாகக் கொடுத்து மாதந் தோறும் நாள் தோறும் வட்டியின்பெயரால் சுரண்டிவருகின்றார்கள்—நெஞ்சு பதறும் வகையிலே ரூபாய்க்கு 4 அணாவுக்கு மேல் வட்டியாக்கி வருகிறார்கள். நெஞ்சில் ஈவு இரக்கமற்ற கல் நெஞ்சு படைத்த இந்த ஷைலக்குகள்! வாழவேண்டுமே என்ற தொல்லைக்காக முணுமுணுத்தபடி வேறுவழியின்றி பாட்டாளி மக்கள் அவர்களது வஞ்சக வலையிலே வீழ்கின்றனர். திருப்பிக் கொடுக்க வகையற்ற பாட்டாளி மக்களை கொடுத்ததற்குமேல் வட்டிபெற்றுங் கூட திருப்தி அடையாது வீடுபுகுந்து உதைத்து துன்புறுத்தி வீட்டைக் கொளுத்தி கிடைத்ததை சுருட்டிக் கொள்ளுகிறார்கள். இந்த இரக்கமற்ற கொடும் பாவிகள்! இத்தகைய உல்லாசபுரியிலிருந்து கொண்டு உழைப்போரின் உதிரத்தை உறிஞ்சி வாழும் உலுத்தர்களை சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படும் இந்த நாளிலும், உழைத்து உழைத்து உருக் குலையும் பாட்டாளியே அவன் உழைப்பின் பயனை அனுபவிக்க வேண்டும் என்று உரிமைப்போர் கிளப்பிக்கொண்டிருக்கும் இந்த நாளிலும் அனுமதித்துக் கொண்டிருப்பது நியாயமா? நேர்மையா? என்று ஆளவந்தார்களைக் கேட்டோம், பன்முறை, பலன் கிட்டாது என அறிந்துங்கூட. எதிர் பார்த்தது போல் பதிலும் கிடைக்கவில்லை,

எனவேதான் இந்நாட்டில் வாழும் நாங்கள், இங்கு அண்டிப் பிழைக்க வந்த நாடோடிக் கும்பலான பனியாக் கூட்டத்தை நோக்கி வெளியேறுங்கள்! என்று கூறுகிறோம். இதுவெறும் வாய்ச்சொல், பேசித் திரியும் வீணர்க்கின் வீணுரையல்ல. உல்லாசபுரியில் வாழும் உலுத்தர்களின் உல்லாச வாழ்வுக்கு வெடி வைக்கும் துந்துபி முழக்கம்—ஆயிரமாயிரம் பாட்டாளி மக்களின் உள்ளக் குமுறல்!

தொழிலாளியின் உழைப்பின் பயனை முதலாளி அடைகிறான்—இது தகாது என்று இடிமுழக்கம் செய்கின்றனர் இந்த நாட்டு 'ஸ்ட்ரைக்' கால கம்யூனிஸ்டுகள். ஆனால் இந்த மார்வாடி—காபூல்காரர்கள் அச்சு மட்டும் அவர்களுடைய பொது வுடமைக் கண்களுக்குத் தெரிவதில்லை போலிருக்கிறது. அவர்களது நோக்கமெல்லாம்—குறிக்கோளெல்லாம் உயர்ந்த சம்பளம் பெறுவதிலேயே இருக்கின்றனவேயொழிய பொதுவுடமைத் திட்டத்தை நிலைநாட்டுவதிலே, முதலாளித்வத்தை முறியடித்து பாட்டாளிகளின் வாழ்க்கையை உயர்த்துவதிலேயே இருப்பதில்லை.

காங்கிரஸ் தோழர்களே, ஆட்சி பீடம் ஏறுவதற்குமுன் வறுமையில் வாடும் மக்களை நோக்கி முதலைக் கண்ணீர் வடித்து இதற்குக் காரணமாயிருக்கும் வெள்ளையர் சுரண்டலை ஒழித்துக்கட்டுவோம் என்று கூறி அவர்களுடைய ஆதரவினால் ஓட்டுப் பெற்று பதவியில் உட்கார்ந்த பிறகு தங்களைத் தட்டிக் கேட்க ஆளில்லை என்ற காரணத்தால் தாங்கள் மக்களிடையே கூறியதை மறந்து, வறுமை பிணிக்கே மூலகாரணமாக விளங்கும் வட்டிக் கொடுமையை ஒழிக்க முன்வராமல் மாற்றுக் கட்சித் தோழர்கள் சட்டசபையிலே இது பற்றி பேசிய பிறகும், அதாவது மார்வாடிகளும் காபூல்காரர்களும் சொந்த முறையில் லேவாதேவி செய்து வருவதை சர்க்கார் அறியுமா? என்று கேட்ட பிறகும், இவர்களுடைய சுரண்டல் திட்டத்தை ஒழிக்க சர்க்கார் ஆவன செய்யுமா? என்று கேட்ட பிறகும், வட நாட்டு பனியாக்கள் இந்தநாட்டு ஏழை மக்களிடம். தொல்லைப் படுத்தி வட்டி வாங்குவது உண்மையா? என்று கேட்டதற்கு "ஓரளவுக்கு உண்மைதான்" என்று பதிலிறுத்த பிறகும் நீண்ட மௌனம் சாதிப்ப தென்றால் இக்கொடிய சுரண்டல் முறைக்கு நீரூற்றி வளர்க்கிறார்கள் என்றுதானே எண்ண வேண்டியிருக்கிறது.

இந்த மார்வாடி டம்பாச்சாரிகளின் அட்டூழியச் செய்கைகளைப் பற்றி பட்டம் பதவியிலுள்ளவர்களுக்கோ, செல்வந்தர்களுக்கோ, ஆலை அரசர்களின் அடிவருடியாகவிருக்கும் சுதந்திர சர்க்காருக்கோ தெரியாமல் இருந்தாலும், இந்த நாட்டு திராவிடமக்களுக்கு நன்கு தெரியும்—ஏனெனில் பெரும்பாலான மக்கள் மார்வாடிக்காரர்களால் பாதிக்கப்பட்டவர்கள். ஆதலால் திராவிடமக்களுக்குத்தான் இவர்களது கொடுமை நன்கு தெரிந்திருக்க முடியும் என்பதை ஆளவந்தார்கள் இன்று இல்லா விட்டாலும் நாளையாவது உணரவேண்டிவரும். இதனை ஆளவந்தார்க்கு உணர்த்தவே தான் ஈரோட்டில் சமீபத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடிய மாகாண தனி மாநாட்டில் பிரிவினைத்திட்டம் வலியுறுத்தப் பட்டது.

"இந்த நாட்டில் இயற்கை வளங்கள் மிகச்சிறப்புற்றிருந்தும் மத்திய சர்க்கார் என்றபிணைப்பில் இந்நாடு கட்டுப் பட்டிருக்கிறபடியால் வட நாட்டிலிருந்து இங்குவந்து சுரண்டும் மார்வாரி, குஜராத்தி முதலியவர்களின் சுரண்டல் காரணமாக இந்நாட்டில் தொழில் வளம் வளர்ச்சி பெற முடியாத நிலையில் மத்திய சர்க்காரின் தொழில் திட்டங்கள் அமைந்திருப்பதனாலும், இந்நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வு செம்மையாக்கப்பட வேண்டுமென்றால் இத்திராவிடநாடு தனிநாடாகபிரித்தாகவேண்டும்.என்றும்திராவிடர்கழகத்தின்அடிப்படைத் திட்டத்தை...இம்மாநாடு வற்புறுத்துகிறது".

தென்னாட்டின்மீது டாட்டாக்களும் பிர்லாக்களும் டால்மியாக் களும் கோயங்காக்களும் வஞ்சக வலை வீசிவிட்டனர்—அவர்களுடைய சுரண்டல் பிடியில் திராவிடம் சிக்கிவிட்டது—சிக்குண்ட திராவிடம் சிதையாதிருக்க வேண்டுமானால் வடவர் பிடியினின்றும் விடுதலை பெறவேண்டும் இந்த நாடு. இதுதான் திராவிடர் கழகத்தின் அடிப்படைத் திட்டம் என்பதே அந்த தீர்மானத்தின் விளக்கம். நாட்டை நலிவுறச் செய்த பயங்கரமானதோர் உண்மையை அழகுபட சித்தரிப்பதுதான் இந்த தீர்மானம்.

"வெள்ளையனே வெளியே போ" என்று காங்கிரஸ் தோழர்கள் முழக்கமிட்டனர். ஆங்கில நாட்டு முதலாளிகளும் அவர்களைச் சார்ந்த ஏகாதிபத்தியவாதிகளும் நம்மை சுரண்டி வருகின்றனர் என்பதை அறிந்த காரணத்தால்! ஒருநாட்டவர் பிரிதொரு நாட்டவர் மீது ஆதிக்கம் செலுத்துவது தவறு—ஆகவே ஆங்கிலேயர் வெளியேறவேண்டியதுதான் நேர்மை என்று தேசீயவாதிகள் அன்று திட்ட வட்டமாகக் கூறினர். நன்று! அப்படியானால் அவர்களது அகராதிப்படி அதே காரணத்தால் வடநாட்டாரும் இங்கிருந்து வெளியேறுவது தானே நேர்மை—அதுதானே மனிதப் பண்பு. நீதி ஆளுக்கொரு விதமாக மாற்றமடையுமா? வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கொரு வகையாகவும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஒருவகையாகவும் மாறுதல்லவா? இந்த தேசீயவாதிகள் கற்பித்த பாடத்தின்படி தான் நாமும் அதே காரணம்காட்டி வடவர்களை வெளியேறுங்கள் என்று கூறுகிறோம். சுரண்டுபவர்களும் சுரண்டப்படுபவர்களும் ஒன்றாகவே இருக்க முடியாது—அப்படிசேர்ந்துவாழ்ந்தால் வெறுப்பும் துவேஷமும் தான் வளரும் என்பதை உலகவரலாறு எடுத்துக்காட்டுகிறது. இதனை நாடாள வந்தோர்அறியவேண்டும்—நாட்டுமக்கள் உணரவேண்டும்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

கொடியவைகளின் மேல் தொடுக்கப் பட்ட போர், இரவின் இருளுடன் மின்மினிகள் தொடுத்தப் போரென, பயனற்றதாய்விட்டது.

ஒரே ஒரு நம்பிக்கை. அறியாமையும், வறுமையும், தீமையும் உலகை நிரப்புவது நிறுத்தப்பட வேண்டும். இதை நற்குணங்களின் புகைப் படங்கள் நிறுத்தமுடியாது. உதாரணமும் பேச்சும் மாற்றா. மதமோ, சட்டமோ, பாதிரியோ தூக்கிலிடுவோரோ இந்நிலையை அழிக்க முடியாது. படைபலத்தால் திருத்தக் கூடியதும் அல்ல இது.

இந்நிலையை மாற்ற இருப்பது ஒரே வழி. விஞ்ஞானம் பெண்களின் சொந்தக்காரனாகத் திகழவேண்டும். விஞ்ஞானம்ஒன்றே மனிதனின்இரட்சகன். குழந்தையைப் பெற்றெடுப்பதற்குத் தான் தகுதியானவளா, தகுதியற்றவளா என்று தனக்குத் தானே சிந்திக்கப் பெண்களுக்குத் தூண்டுவது விஞ்ஞானம்.

இதுதான் நிலையை மாற்ற நலமான நடைப்பாதை. இதுதான் பெண்களைச் சுதந்திரப் பாவைகளாக மாற்றக்கூடியது. இந்த நிலை ஏற்பட்டால் பிறக்கும் குழந்தைகள் வரவேற்கப்படும். இன்பத்தால் விம்மும் மார்புகளிலே குழந்தைகள் வளரும். அவைகள் இல்லங்களை இன்பத்தால் நிரப்பும்.

அடிமைச் சேற்றிலே வாழாத மக்களைவிட, அடிமைகள் உயர்ந்தோர் என்ற எண்ணமும் அறிவைவிட பயமே மனிதனை நல்வழி படுத்தும் என்ற கருத்தும், பிறரின் கட்டளைப் படி நடப்பவனே பெருந் தன்மையாளன் என்ற மனப் பான்மையும், அறியாமை என்ற நிலத்திலேதான், நற்குணத்தின் மலர்கள் விளைகின்றன என்ற நினைப்பும், அகத்திலே கொண்ட மக்கள் முன்கூறிய திருத்தத்தினைக்கண்டு அதிர்ச்சியுற்ற தங்களது முகங்களை எதிர்ப்பின் கரங்களால் மூடிக்கொள்ளட்டும்.

ஒளி நற்குணத்தின் பகைவன் என்ற சிந்தையும், குற்றமற்ற தன்மை அறியாமையின் இருளிலே இருக்கிறது என்ற கற்பனையும், தங்களின் நலத்திற்கு ஊட்டமளிப்பது இயற்கை என்று அறிவதும், தங்களைத் தாங்களே அறிந்துகொள்வதும் ஆபத்தானவை என்ற தீர்ப்பும், கொண்ட மக்களுக்கு, பகுத்தறிவை ஆசையின் ஆட்சிப் பீடத்திலே அமர வைப்பது திகைப்பை அளிக்கும்.

காரண காரியத்திலே கருத்து கொண்டு, பகுத்தறிவுப் பாதையிலே வளரும் பெருந்தன்மையிலே களிப்புக் கொண்டு, உலகைத் தவறுகளாலும், இல்லல்களாலும் நிரப்ப நினைவு பூணாத மக்களின் காலத்தை நான் விரும்புகிறேன்.

(தொடரும்)

ஸில்க் சாரி **Rs. 10-8-0**

46"×6 கஜம் ஸில்க் சாரி. பச்சை, புளூ, வையலட், ரோஸ், கருப்பு முதலிய பாஸ்ட் கலர்களில் அழகிய பார்டர்கள் அமைத்த சாரி 1-க்கு ரூ. 10-8-0 எல்லா இடங்களுக்கும் ஏஜண்டுகளும் விற்பனையாளர்களும் உடனே தேவை.

ஸ்ரீ கிருஷ்ண வீவிங் பாக்டரி,
கோட்டார், P. O.
(South TRAVANCORE) Tel: "SWAMY CO,"

Edited and Published by B. Ran ganadhan, 33. Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Mg. Editor R. Rajagopal; Printed by Ch. Adinarayana at the Andhra Printing House, 4, Subramania Mudali Street; Purasawalkam, Madras. 7.